# ஆரம்பக்கல்வி




ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ 3] [தனி இதழ் 25 ந. பை.

மலர் 30 | மே 1966 | இதழ் 5

# சிறந்த தலைவரின் உயர்ந்த வாழ்வு

ஏறத்தாழ இரண்டு நூற்றாண்டுகளுக்குமேல் இந்தியப் பெரு நாடு வெள்ளைக்கார ஏகாதிபத்தியத்தின் இரும்புத் தளைகளில் சிக்குண்டு தவித்தபோது, அந்தத் தளைகளை உடைத்தெறிவதற்காக அஞ்சாத நெஞ்சத்தோடும் அசையாத உறுதியோடும் அரும்பணியாற்றிய மாபெருந் தலைவர்களில் தலைசிறந்த ஒருவர், **கோபால கிருஷ்ண கோகலே.**

மராட்டிய மண்டலம் பெற்றெடுத்த இம் மாவீரர், இந்த உலகத்தில் வாழ்ந்ததெல்லாம் நாற்பத்தி ஒன்பது ஆண்டுகள் மட்டுமே என்றபோதிலும், அந்தக் குறுகிய காலத்திற்கு உள்ளாகவே அவர் என்றென்றும் அழியாத பெரும் புகழைத் தன் பெயரின் பின்னால் சேர்த்து வைத்து விட்டார்.

கோபால கிருஷ்ண கோகலே என்னும் திருப்பெயர், காலம் என்னும் கடும்புயலாலும் அழிக்கப்பட முடியாத ஓவியம்; இந்திய நாட்டின் வருங்காலச் சந்ததிகள் எல்லாம் படித்துப் படித்துப் பேரார்வமும் பெருக்கமும் பெறுதற்குரிய ஒப்பற்ற காவியம்: இந்திய வரலாறு என்னும் மாபெருஞ் சுவடியின் ஈடு இணையற்ற சிறப்புடைய ஓர் எழிலார்ந்த அத்தியாயம்; ஆகும் நெறி இது, ஆகா நெறி இது என்பதை நிகழ்காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் திட்ட வட்டமான முறையில் தெளிவுறுத்திக் காட்டும் ஒரு கலங்கரை விளக்கம்.

கோபால கிருஷ்ண கோகலே, தனக்கென வாழாத பிறர்க்குரியாளராகத் திகழ்ந்தவர்: துளியேனும் தன்னலத்தைக் கருதாத தகவுடைமை படைத்தவர்; அப்பழுக்கற்ற நாட்டுப் பற்றுக்கும் அணுவளவும் குறை செல்ல முடியாத பொதுத் தொண்டுக்கும் இணையற்ற எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவர். தன் அறிவு முழுவதையும், ஆற்றல் அவ்வளவையும், திறமைகள் அனைத்தையும் நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்காகவே செலவிட்டவர்; பொது வாழ்வுப் போர்க்களத்தில் ஈடுபடும் ஒரு தலைவர் எத்தகைய அறிவுத் திறமைகளும் பண்புச் சிறப்புகளும் தூய்மைப் போக்குகளும் தெளிந்த எண்ணங்களும் படைத்தவராக இருக்க வேண்டும் என்னும் இலக்கணத்தை வரையறுத்துக் காட்டும் ஓர் இலக்கியமாகத் திருவாளர் கோகலேயின் வாழ்க்கை திகழ்ந்தது என்று கூறினால் அது மிகையாகாது.

பொது வாழ்வில் அவர் முன்னுக்கு வந்த வேகம், உண்மையிலேயே வியப்பை அளிக்கத்தக்க ஒன்றாகும். மிக எளிய குடும்பத்தில் பிறந்து, தன் பன்னிரண்டாம் வயதிலேயே தன் தந்தையை இழந்து, தன் தமையனாரால் ஆதரித்து வளர்க்கப்பட்ட அப்பெருமகனார், தன் இடையறாத உழைப்பாலும் அயராத படிப்பாலும் பதினெட்டாம் வயதிலேயே பட்டதாரியாக உயர்ந்து பொது வாழ்வில் ஈடுபடலானார். பம்பாய் மாநில மாநாட்டின் செயலாளராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டபோது அவருடைய வயது 22 தான். 29 ஆம் வயதில் அவர் இந்தியத் தேசியக் காங்கிரஸ் மாநாட்டின் வரவேற்புக் குழுச் செயலாளர். 31 வது வயதில், வெல்பி கமிஷன் என்று அழைக்கப்படும் பிரிட்டிஷ் அரசாங்கக் குழுவின்முன் கருத்துக்

களைத் தெரிவிப்பதற்காக இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்ட நால்வர் குழுவில் அவரும் ஓர் உறுப்பினர். 34-வது வயதில், பம்பாய் மாநிலச் சட்ட மன்றத்தின் மேலவை உறுப்பினர். 36 வது வயதில் அனைத்திந்தியச் சட்ட மன்றத்தின் மேலவை உறுப்பினர். 39 வது வயதிலோ, அனைத்திந்தியக் காங்கிரஸ் மாநாட்டின் தலைமை அவையை அடைந்தது.

இந்தியா விடுதலை பெற வேண்டும் என்பதற்காக அவர் தன் எழுத்தாலும் பேச்சாலும் சட்டமன்றப் பணியாலும் இடையறாது உழைத்தார். அவருடைய விடுதலைக் கிளர்ச்சி சட்ட வரம்புகளுக்கு உட்பட்ட ஒன்றாகவே இருந்துவந்தது. கோரிக்கைகளின் நியாயத்தை ஆதாரங்களோடு எடுத்து விளக்குவது, பொது மக்களின் உள்ளங்களில் அந் நியாயத்தை வேரூன்றச் செய்வது, அப்படிச் செய்வதன் வாயிலாக அந் நியாயத்தின் பக்கம் அப்பொது மக்களைத் திரட்டுவது ஆகிய ஆக்கபூர்வமான முறைகளில் கோகலே அழுத்தமான நம்பிக்கை படைத்தவராக இருந்தார்.

பொது வாழ்வில் ஈடுபடுகிற ஒவ்வொருவரும், கருத்துத் தெளிவும், தூய உள்ளமும், தன்னலமற்ற போக்கும், தொண்டு உணர்ச்சியும் படைத்தவர்களாகத் திகழ்ந்து, நாட்டின் முன்னேற்றத்திற்காகத் தன்னால் இயன்றன அனைத்தையும் செய்யும் ஆர்வம் படைத்தவராகத் திகழவேண்டும் என்பது அந்த அறிஞர் பெருந்தகையின் உள்ளக் கிடக்கையாக விளங்கியது. இத்தகைய பண்பும் திறமும் தியாக உணர்வும் நாட்டுப் பற்றும் படைத்த நல்லறிவாளர்களை ஒன்று திரட்டி, அவர்களை முழு நேரப் பொதுநல ஊழியர்களாகப் பயிற்சியளிப்பதற்காக 'இந்திய ஊழியர் சங்கம்' என்னும் சிறந்த அமைப்பானது, கோகலே அவர்களால் 1905 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

1. என் உள்ளத்தில் இந்நாடே முதலிடம் பெறும். என்னால் இயன்றன அனைத்தையும் இந்நாட்டுக்காகச் செய்வேன்.

2. நாட்டுக்காக உழைக்கும் பணியில் எனக்காக வென்று எதையும் நாடமாட்டேன்.

3. எப்போதும் நான் தூய்மை வாழ்க்கையையே நடத்துவேன்.

4. யாருடனும் எக்காலத்திலும் நான் சண்டையிட மாட்டேன்.

5. இந்தியர் யாவரும் என் உடன் பிறந்தவர்கள். குலம், சமயம், பால் வேறுபாடுகளைக் கருதாது, எல்லோருடைய வளர்ச்சிக்காகவும் மேம்பாட்டுக்காகவும் நான் உழைப்பேன்.

6. சங்கத்தின் நோக்கங்களை எப்போதும் மனத்தில் நிலை நிறுத்தி, அதன் செயல்களை ஊக்கத்துடன் கவனித்து, அவற்றைப் பெருக்க என்னால் இயன்றவற்றைச் செய்வேன். சங்கத்தின் நோக்கங்களுக்கு முரணான எச்செயல்களையும் யாண்டும் செய்ய மாட்டேன்.

இவையே, அச் சங்கத்தில் சேர்ந்த உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் எடுத்துக்கொண்ட உறுதி மொழிகளாகும். சங்கத்தில் சேரும் ஒவ்வொருவரும் ஐந்து ஆண்டுகள் அதில் தங்கள் வேலைக்கு ஏற்ற பயிற்சியைப் பெறவேண்டும். அதன் பின்னர்தான், அவர்கள் 'உறுப்பினர்' என்னும் சிறப்பு நிலையைப் பெறுவர். பயிற்சிக் காலத்தில் அவர்களுக்கு முதலில் ரூ. 30 ம், பின்னர் ரூ. 45 ம் மாத ஊதியமாகத் தரப்படும். உறுப்பினரான பின்னர் தொடக்கத்தில் ரூ. 50 ம், அதன் பின் ரூ. 60 ம், அதற்கும் பிறகு ரூ. 65 ம் ஊதியமாக அளிக்கப்படும். இத்தொகையுடன், கைச் செலவுக்காக ரூ. பதும், வாடகைக்காக ரூ. பதினைந்தும் தரப்படும். உறுப்பினர்களின் குடும்பப் பாதுகாப்புக்கு அவர்கள் பேரில் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி மூலமாக ரூ. 3000 க்கு ஏற்பாடு செய்யப்படும். உறுப்பினர்கள் வேறு வழிகளில் ஊதியம் திரட்டினாலும், கிடைக்கும் தொகை முழுவதையும் சங்கத்திற்கே தந்துவிட வேண்டும்.

இந் நிபந்தனைகள் யாவற்றையும் ஏற்றுக்கொண்டு, தங்கள் வாழ்க்கை முழுவதையும் முழு நேரப் பொதுநலத் தொண்டுக்காக அர்ப்பணித்து, இச் சங்கத்தின் உறுப்பினர்களாக அமர்ந்தவர்கள், இச் சங்கத்தின் வாயிலாக ஆற்றிய அருந்தொண்டு இணையில்லாததாக அமைந்தது. இச் சங்கத்தின் உறுப்பினர்கள், இந்திய நாட்டின் விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபடுவதைத் தங்கள் தலையான நோக்கமாகக் கொண்டிருந்தபோதிலும் அந்த ஒரு நோக்கத்தோடு அவர்கள் மன நிறைவு எய்திவிடவில்லை. மக்களுக்கு உடனடியாக நன்மை பயக்கக்கூடிய பல்வேறு துறைகள் வாயிலாகவும் அவர்கள் தொண்டாற்ற முனைந்தார்கள். கல்வி வளர்ச்சியைப் பெருக்குதல், தாழ்ந்த வகுப்பினரை முன்னேற்றுதல், கடன் வழங்கும் சங்கங்களை நிறுவி ஏழை மக்களின் உண்மைத் தேவைகளுக்கான கடன்களை வழங்குதல், வெள்ளம் புயல் முதலிய இயற்கைக் கொடுமைகளுக்கு உள்ளாகித் தவிக்கும் பொது மக்களுக்கு உடனடியாகத் தேவைப்படும் உதவிகளை அவசர உணர்வுடன் செய்து முடித்தல், பஞ்ச நிலை ஏற்பட்ட இடங்களுக்கு நேரிற் சென்று அங்கேயே பல நாட்கள் தங்கிப்

பஞ்சத்தின் கொடுமையைத் தணித்தல் முதலிய பலதிறப்பட்ட சமுதாயத் தொண்டுகளில் சங்க உறுப்பினர்கள் ஈடுபட்டு அரும் பணி ஆற்றி வந்தார்கள்.

கோபால கிருஷ்ண கோகலே அவர்களால் நிறுவப்பட்ட "இந்திய ஊழியர் சங்கம்" என்னும் இந்த நிறுவனமும், அதன் அமைப்பு முறையும், அதன் உறுப்பினர்களின் இலட்சிய நோக்கும், சங்கமும் உறுப்பினர்களும் ஆற்றிய இணையிலாத் தொண்டும், கோகலே அவர்களின் அறிவுக்கும் ஆற்றலுக்கும் செய் நேர்த்திக்கும் கிடைத்த மிகச் சிறந்த சான்றுகளாக அமைந்து விட்டன.

கோகலே அவர்களின் சட்டமன்றத் தொண்டும் தனிச் சிறப்பு வாய்ந்ததாகத் திகழ்ந்தது. பம்பாய் மாநிலச் சட்டமன்ற உறுப்பினராக விளங்கிய போதும் சரி, அனைத்திந்தியச் சட்ட மன்ற உறுப்பினராக ஒளி வீசிய நிலையிலும் சரி, அவர் அங்கு ஆற்றிய பணி, சட்டமன்றத் துறையில் ஈடுபட விழைபவர்கள் யாவரும் தவறாமல் பின்பற்றுவதற்கு உரிய தலைசிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. சட்டமன்றத்தில் அவர் எப்போது எந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேச நேர்ந்தாலும் அப்பிரச்சினை பற்றிய எல்லாத் தகவல்களையும் படித்துத் தெளிந்து ஒன்று திரட்டி ஒழுங்குபடுத்தி வைத்துக் கொண்டு, ஆதாரபூர்வமான முறையில், பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள்கூட மறுக்க முடியாதவகையில், அடுக்கடுக்கான சான்றுகளை வரிசை வரிசையாக எடுத்துக்காட்டிப் பேசுவதையே தன் நெறியாகக் கொண்டிருந்தார். அவருடைய சட்டமன்றப் பேச்சு ஒவ்வொன்றும் ஒவ்வோர் அறிவுக் கருவூலமாக, ஆதாரத் தொகுப்பாக, உண்மைகளின் களஞ்சியமாக விளங்கிய காரணத்தால், சட்டமன்றத்தில் அவர் பேச எழுந்த போதெல்லாம் அனைவருடைய கவனமும் அவர் மீதே முழுமையாகப் பதியலாயிற்று.

1911 ஆம் ஆண்டில், அனைத்திந்தியச் சட்டமன்றத்தில் அவரால் கொண்டுவரப்பட்ட **"ஆரம்பக் கல்வி மசோதா,** கல்வித் துறையின் வளர்ச்சியில் அவர் எவ்வளவு ஆர்வம் கொண்டிருந்தார் என்பதற்கும், சட்டமன்றப் பணியை அவர் எத்துணைச் செம்மையாக ஆற்றி வந்தார் என்பதற்கும் தன்னிகரற்ற ஒரு சான்றாகத் திகழ்கிறது. இம் மசோதாவை முன் மொழிந்த போது அவரால் ஆற்றப்பட்ட அரிய சொற் பொழிவில், ஒரு நாட்டு மக்கள் முன்னேற்றமடைந்து நல் வாழ்வு வாழ்வதற்கு ஆரம்பக் கல்வி எத்துணை இன்றியமையாதது என்பதையும், அக்கல்வியைப் பரவச் செய்வது எங்ஙனம் நாகரிகமுள்ள அரசாங்கம் ஒவ்வொன்றின் கடமையாகும் என்பதையும், ஏனைய நாடுகளோடு ஒப்பிடும்போது இந்தியாவில் ஆரம்பக் கல்வி எத்துணைத் தாழ்ந்த நிலையில் இருக்கின்றது என்பதையும், ஆதலின் முன்னிலும் மிகுதியாகக் கல்வி பரவுவதற்கு உரிய சிறந்த

வழி கட்டாய இலவசத் தொடக்கக் கல்வியே என்பதையும் கோகலே அவர்கள் மறுக்கமுடியாத வகையில் விளக்கிக்கூறியிருந்தார்.

நகராட்சி மன்றமோ அல்லது மாவட்ட ஆட்சி மன்றமோ, தன் ஆட்சிக்கு உட்பட்ட இடங்களில், அரசாங்கத்தாரின் ஒப்புதலைப் பெற்றுக் கட்டாய ஆரம்பக் கல்வியைப் பரப்பலாம் என்பதும், அப்படிப் பரப்பப்படும் இடங்களில் ஏழை எளியோருக்கு இலவசமாகக் கல்வியை அளிக்கலாம் என்பதுமே, கோகலே அவர்களால் கொண்டுவரப்பட்ட 'ஆரம்பக் கல்வி மசோதா'வின் அடிப்படைக் கருத்தாகும். இந்தியாவை ஆண்டுவந்த அப்போதைய பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இம் மசோதாவை ஏற்றுக்கொள்ளவில்லை என்றபோதிலும், இம்மசோதாவின் விளைவாக, ஆரம்பக் கல்வியின் இன்றியமையாமையைப்பற்றி அரசாங்கத்தாருக்கும் பொது மக்களுக்கும் மிகுந்த ஊக்கம் ஏற்பட்டது என்பதையும், அந்த ஊக்கத்தின் பயனாக நாளுக்கு நாள் ஆரம்பக் கல்வியின் வளர்ச்சி சிறந்து பொலிந்தது என்பதையும் எவரும் மறுத்தல் இயலாது.

கோகலே அவர்கள் 1884 ஆம் ஆண்டில் பூனா நகரத்தில் தொடங்கப்பட்ட தக்காணக் கல்விச் சங்கத்தில் ஓர் உறுப்பினராகச் சேர்ந்து, அச் சங்கத்தால் நடத்தப்பட்ட உயர் நிலைப் பள்ளியிலும் கல்லூரியிலும் பதினெட்டு ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார் என்பதையும், அப்படிப் பணியாற்றிய போது மிகச் சிறிய தொகையை மட்டுமே மாத ஊதியமாகப் பெற்று வந்தார் என்பதையும், ஏழை மராட்டிய இளைஞர்களின் கல்வி ஏழ்மையின் காரணமாகத் தடைபடக் கூடாது என்னும் சீரிய நோக்கத்தின் விளைவாகவே அவர் இத்தகைய தியாகத்தையும் தொண்டு மனப்பான்மையையும் ஏற்றுக் கொண்டார் என்பதையும் எண்ணிப் பார்க்கும் போது, கல்வியின் வளர்ச்சியில் அவர் கொண்டிருந்த ஆர்வம் எத்துணைச் சிறந்தது என்பது வெள்ளிடைமலை எனவிளக்கமாகும்.

1866 ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் நாள் பிறந்து, 1915 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19 ஆம் நாள் இயற்கை எய்திய கோகலே அவர்களின் நூறாவது பிறந்த நாள் விழா, இந்த மாதம் 9 ஆம் நாளன்று நாடெங்கும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது, முற்றிலும் பொருத்தமான ஒரு நிகழ்ச்சியாகும். உலக உத்தமர் காந்தியடிகளால் 'என் அரசியல் ஆசான்' என்றும் 'குரு' என்றும் போற்றிப் புகழப்பட்ட மாபெருந் தலைவர், கோகலே. அத்தகைய பெருந்தகையாளருக்கு விழா எடுப்பதும், நன்றி காட்டுவதும், அஞ்சலி செலுத்துவதும் நாட்டின் தனிப் பெருங் கடமை என்பதில் ஐயமும் உண்டோ?

# குழந்தையின் அழுகை

ஜே. டி. பாக்ஸ், எம். டி.

குழந்தை அழுதால், அதற்குத் தகுந்த காரணம் இருக்க வேண்டும். தனது வருத்தம் தொந்தரவு யாவையும் வெளியிடுவதற்கு அதற்கு ஏற்பட்ட ஒரே வழி அழுகை தான். தாயை அல்லது தந்தையை வருத்தப் படுத்த வேண்டும் என்பது அதன் நோக்கம் அல்ல. அது அழும் போது, அதன் காரணத்தை அறிந்து, அதை நீக்க வேண்டியது பெற்றோர் கடமை.

## புறக் காரணங்கள்

குழந்தை மூத்திரம் பெய்வதினால், அதன் இடுப்பைச் சுற்றியிருக்கும் துணி நனையக்கூடும். அந்த ஈரம் குளிர்ச்சியை உண்டாக்கும். அப்பொழுது அது செய்யக்கூடியது என்ன? அழ வேண்டியது தான். எனவே, தோலில் உண்டாகும் குளிரைப் போக்க அதன் இடுப்புத் துணியை அகற்ற வேண்டும். அடிக்கடி இதைக் கவனித்துக் கொண்டால், அது அழ இடம் இராது.

இடுப்புத் துணியில் குத்தியிருக்கும் ஊக்கு சில வேளை திறந்து உடலில் குத்தலாம்.

## தோலைப் பற்றிய நோய்கள்

சூட்டினாலோ, மூத்திரத் துணியை அகற்றாததினாலோ, அலர்ஜி சம்பந்தமான நோயாலோ குழந்தைகள் உபாதைப் படலாம். கோடை காலத்தில் உஷ்ணத்தினால் குரு காப்புளம் உண்டாகலாம். குளிர் காலத்தில் அதிக உஷ்ணமான ஆடைகளை அணிவதால் வேர்வை உண்டாகி, சிரங்கு தோன்றலாம், எந்தப் பாகங்களில் வேர்வை அதிகம் தங்குகின்றதோ, அந்த இடங்களிலேயே உண்டாகும்.

குழந்தையின் உடம்பில் நல்ல காற்றுப் பட விடுவதே இதற்குத் தகுந்த பரிகாரம். கோடையில் குறைந்த அளவில் மெல்லிய துணிகளை அணிய வேண்டும். வேர்வையால் தினவு உண்டாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தோல் உலரச் செய்ய வேண்டும். ஈரத்தை உறிஞ்சக் கூடிய பவுடர் போடுவது நல்லது. நல்ல வேர்வை உண்டாகும் பொழுது, உடலில் எண்ணெய் பூசக்கூடாது. பூசினால், வேர்வைக் கோளங்கள் அடைபட்டு, வேர்வை வெளியாகாது. நிலைமையை மோசமாக்கும்.

மூத்திரத்தால் உண்டாகும் தினவை நீக்க இடுப்புத் துணியை வெந்நீரில் நன்றாய்ப் பல தடவை அலச வேண்டும். கடைசியாய் அலசும்பொழுது, கொஞ்

சம் போரிக் ஆசிட் கூட சேர்த்துக் கொள்ளவேண்டும். நோயணுக்களைக் கொல்ல இது உதவும்.

அலர்ஜி சிரங்குகள், சிவப்புக் கொப்புளங்களாக முகம், கழுத்து, கை, கால் மடக்குகளில் உண்டாகும். முட்டை, கோதுமை, பால் முதலியவை குழந்தைக்குப் பொருந்தாமல் இருப்பது காரணமாகலாம். வேர்க்குரு, மூத்திரச் சிரங்கு முதலியவைகளுக்குரிய சிகிச்சை பயன்படாவிடில் டாக்டரிடம் போகவேண்டும்.

## பசி அழுகை, அஜீரண அழுகை

பசி திடீரென உண்டாகாது. ஆகையால் குழந்தை இலேசாக அழ ஆரம்பிக்கும். பசி அதிகரிக்க, அழுகையும் அதிகமாகும். சாப்பாட்டு வேளைக்கு முன் குழந்தை அழ ஆரம்பித்தால் போதுமான உணவு கொள்ளவில்லை, கூடுதல் உணவு தேவை எனக் காட்டுகிறது.

அஜீரணமும் குழந்தைகளுக்கு எரிச்சலை மூட்டும். ஆகாரத்துக்குப் பின்னால் அழும். ஆகாரத்துக்கு முன்னால் அழுவது பசியினால், பின்னால் அழுவது அஜீரணத்தால். சாப்பிடும்போது குழந்தையைத் தோளில் கிடத்தி, முதுகில் மெதுவாய்த் தடவிக் கொடுக்கவேண்டும். வயிற்றிலும் தோளினால் கொஞ்சம் அழுத்தினால் வாயுக் குமிழி வெளியே வந்துவிடும். அத்துடன் கொஞ்சம் வாந்தி பண்ணச் செய்தால் வயிறு தளரும். அழுகையும் நிற்கும். ஒவ்வொரு உணவிற்குப் பின்னும் இதைச் செய்வது அவசியம்.

## வயிற்று வலி

இது முதல் மாதம் ஆரம்பித்து, மூன்று மாதம் முடியுமளவும் இருக்கும். சிறு குழந்தைகளுக்கு தினமும் அதே நேரத்தில் உண்டாகும். காலை 2-முதல் 6-மணிக்கு இடையிலும். மாலை 6-மணிக்கும் 10-மணிக்கும் இடையிலும் உண்டாகலாம். சில குழந்தைகளுக்கு இரவில் உண்டாகலாம். சிலர் இதை மூன்று மாதவலி என்பார்கள்.

இதன் காரணம் என்னவென்று தெரியவில்லை. ஆயினும் நரம்புத் தொகுதி பக்குவமடையாததால் உண்டாக்கும் விறைப்பினால் ஏற்படுவது எனக் கருதப்படுகிறது. குழந்தைக்குப் பால் கொடுக்கும் போது உட்சென்ற வாயு வெளியேறாததினால், சிறு குடலில் தங்கி, வலி உண்டாகின்றது என்றும் சிலர் கருதுகிறார்கள். வலி உண்டாகும் போது அபான வாயு பறிவது இதற்கு அத்தாட்சியாகும். இவைகளை மனதிற் கொண்டு சில பரிகார மார்க்கங்களைக் கவனிப்போம்.

குழந்தையைத் தாயின் மடியில் குப்புறப் படுக்க வைத்து, அசைந்தாட்டுவது குழந்தைக்குச் சந்தோஷமாக இருக்கும். வயிற்றின் அடியில் வெந்நீர்ப் பை வைத்துக் கொள்ளவேண்டும். பை

யைத் துணியினால் பொதிந்து கொள்வது அவசியம். முதுகைத் தடவிக்கொடுத்தாலும் வலியைத் தணிக்க உதவியாக இருக்கலாம். திரும்பவும் வலியால் கஷ்டப்படுமாயின், வெது வெதுப்பான தண்ணீரால் எனிமா கொடுப்பது நல்லது. ஒரு நாளைக்கு ஒரு தடவைக்கு மேல் எனிமா கொடுக்கக்கூடாது. மலக்கட்டு நீக்குவதற்குத் திரவ பதார்த்தங்கள் கொடுக்கவேண்டும். மேற்கூறிய முயற்சிகளால் பயன் இல்லாவிடில், டாக்டரிடமிருந்து மருந்து வாங்கிக் கொள்ள வேண்டும்.

## கோப அழுகை

இது எந்தச் சமயத்திலும் உண்டாகலாம். ஆயாசம், இதற்குக் காரணமாக இருக்கலாம். பழக்கமாகச் செய்யும் சில காரியங்களைச் செய்யாமற் போவதும் காரணமாகலாம். அமைதியாய்த் தூங்கச் செய்வதே நிவாரணம். மெதுவாகத் தடவியும் சாந்தமான வார்த்தைகளாலும் அமைதி உண்டாக்க வேண்டும். தேம்பித் தேம்பி அழுவதும் கண் திறந்தபடியே வைத்துத் தூங்குவதும், அமைதியற்றுப் படுக்கையில் புரளுவதும், ஒன்றிலும் விருப்பமில்லாத நிலைமையும் வியாதியின் அறிகுறிகளாகும். கொஞ்சமேனும் சந்தேகம் ஏற்படுமாயின், உடனே தெர்மாமீட்டரால் குழந்தையின் அனல் நிலை அறிய வேண்டும்.

சிணுங்கி அழுதல், குறை கூறி அழுதல், முணுமுணுக்கல், இடைவிட்டு அழுதல், கண்ணீரின்றி அழுதல் முதலியவைகளும் கவனிக்கப்பட வேண்டியவைகளே. திடீரெனக் கீழே விழுமாயின் கத்தி அழும். தாய் சீக்கிரம் வர வேண்டும் என்பதே அதன் ஆசை. தடவிக்கொடுத்தல், காயம் அல்லது அடிபட்ட இடத்தைத் தேய்த்தல், முத்தம் கொடுத்தல் முதலியவை நோயைத் தணிக்கும்.

குழந்தை அழுகையில், தாய்மார் ஆத்திரம் அடையக் கூடாது. அமைதி, நிதானம், விவேகம் சமயோசித புத்தி வேண்டும்.

—" நல்வழி "

---

## சென்னை நகரில் சட்ட பூர்வ ரேஷனை அமல் நடத்த ரூ. 18 லட்சம் செலவு

சென்னை, மார்ச். 28—சட்ட பூர்வமான ரேஷன் திட்டத்தை சென்னை நகரில் அமல் நடத்துவதற்குச் சுமார் ரூ. 18 லட்சம் செலவாயிற்று என்று உணவு மந்திரி இன்று மேல் சபையில் கூறினார்.

ஒரு கேள்விக்குப் பதில் கூறுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஒழுங்காகவும் தொடர்ச்சியாகவும் மக்களுக்குத் தரமான அரிசியைச் சப்ளை செய்ய வேண்டும் என்பதுதான் சர்க்காரின் உத்தேசம் என்று மந்திரி கூறினார்.

# மன அமைதி எங்கே?

ம. வின்சென்ட் சுதாகரன்

உலகிலே தோன்றிய பலரும் இந்தக் கேள்வியைக் கேட்கின்றார்கள். அறிஞர்களாகட்டும் அல்லது பாமரர்களாகட்டும் எல்லோருமே மன அமைதிக்காக ஏங்குகின்றனர். அதை நாடித் தேடியலைகின்றனர். தங்கள் வாழ்வில் அமைதி வேண்டும். உலகத்திலே அமைதி நிலவ வேண்டுமென்றே யாவரும் விரும்புகின்றனர். ஆனால் யாருக்கும் மன அமைதி கிடைத்ததாகத் தெரியவில்லை.

ஒவ்வொருவருக்கும் மன அமைதி கிடைத்துவிட்டால் போதும்; மற்ற எதைப்பற்றியுமே அவர்கள் கவலைப்படமாட்டார்கள். இந்த மன அமைதிக்காக யார் யாரோ என்னென்னவோ செய்கிறார்கள். உலகை மறந்துவிட்டால் மன அமைதி கிடைத்துவிடுமென்று சிலர் நினைக்கின்றார்கள். அதற்கு ஒரே வழி மது. ஆனால் மதுவிலேயே மூழ்கிக் கிடப்பவருக்கோ, மங்கையரை நாடுபவர்களுக்கோ அமைதி... அவர்கள் நாடும் மன அமைதி கிடுவதாகத் தெரியவில்லை. தெரிந்திருந்தால் இன்று உலகமே மதுவில் ஆழ்ந்துவிட்டிருக்கும்.

கலைகளில் மூழ்கிவிட்டால் போதும். மன அமைதி தானே கிடைத்து விடும் என்று பலர் நம்புகிறார்கள். ஆனால் அந்தக் கலைகளே அவர்களை அலைக்கழிக்கும்போது பழைய நிலைக்கே திரும்புகின்றார்கள். பிறருக்காக எதையாவது செய்தால் மன அமைதி பெற முடியும் என்று அறியும்போது ஆர்வத்துடன் பலவற்றையும் செய்கின்றார்கள். ஆனால் அதில் முழுமன அமைதி கிட்டிவிடுகின்றதா...? கைப்பொருளை எல்லாம் உதவட்டும்; மெய்வருந்திப் பலருக்காகவும் உழைக்கட்டும்...முடிவில் வறுமை...உடல் நோய். அவர்கள் எதிர் நோக்கிய அமைதி...அது மட்டும் கிடைப்பதுபோல் நெருங்கி வந்து வந்து கண்ணாமூச்சி யாடிவிட்டு எட்டாமல் மறைந்தே விடுகின்றது.

சாவில்தான் மன அமைதி கிட்டும் என்று எல்லோருமே நம்புகின்றார்கள். ஆனால் சாவதற்கு யாருமே விரும்புவதில்லை. வாழ்வதற்குத்தான் மன அமைதியை வேண்டுகின்றார்கள்.

ஒருவனும் தன் வாழ்வில் மன அமைதியைப் பெறவே முடியாதா? மன அமைதி என்பது என்ன? யாருமே திட்டமாகச் சொல்லவில்லையே. திட்டமாகத் தெரியாத ஒன்றையா கட்டிப் பிடிக்க உலகமே ஓடுகின்றது? ஆனால் சில வேளைகளில் ஒருவனக்யான ஆழ்ந்த நபப்புகளும் தகை

யும் குருதியும் மயங்கிய நிலை போல் இன்னதென்றே விளக்க முடியாத ஓர் நிறைவு...ஆனந்தக் கசிவு தோன்றி...நின்று...மறைகின்றதே அந்த நிலைதான் மன அமைதியா? ஆனால் அந்த நிலை எல்லோர் வாழ்விலும் நிகழ்ந்தாலும் நீடித்து நிற்பதில்லையே.

அந்த நிலையை, உயிரை உருக்கும் இன்ப அலைகளான அந்த உணர்வை எப்போது பெறுகின்றோம்? இயற்கையோடு இயற்கையாய் ஒன்றிவிடும்போது, கடல் அலைகளிலே கண்களையும் கருத்தையும் பதித்து நிற்கும்போது, மெல்லிய நீர்த்துளிகளைத் தாங்கிய இளங்காற்று முகத்தைத் தொட்டு விட்டுப் போகின்றதே அந்த நிலையில் மன அமைதி உரசிவிட்டு மறைந்து போகின்றது. முழு நிலவில், மலரும் மணங்கமழும் மலரில், மழலை அமுதத்தில், மெல்லியலார் பூஞ்சிரிப்பாம் புன்சிரிப்பில், தாயன்பில், இசையில் இன்ப உணர்வைப் பெறும்போதெல்லாம் மன அமைதி உள்ளத்தைத் தடவி விட்டுச் செல்லுவதை உணருகின்றோம். அப்படியானால் நிலையான மன அமைதியைப் பெறவே முடியாதா? முடியாதுதான். மனம் என்பது என்னவென்று கண்டு பிடிக்குமட்டும் 'நிலையான மன அமைதி' என்பதைப் பெறவே இயலாது.

ஒரு வேளை மன அமைதி என்பதே அந்தத் தொட்டுத் தடவி மறையும் அளவினைமட்டும் உடையதாக இருக்கலாமல்லவா? முழுமையான மன அமைதி என்பதே மனிதனின் கற்பனையாக இருக்கலாமே. இல்லாத ஒன்றினை இருப்பதாக எண்ணிக் கொண்டு தேடி அலையும் மனிதனின் ஆவல்களிலே இதுவும் ஒன்றோ என்னவோ...அப்படியானால் முழுமன அமைதி என்பது வெறும் கானல்நீர்தானா?

கற்பனையிலே கண்ட சுவர்க்கம், நரகம் ஆகியவற்றிற்கு வடிவமும் தந்து பின்பு சுவர்க்கத்தை அடைய வருந்தி வருந்தி வாழும், இல்லை என்று சொல்லவும் முடியாமல், இருக்கின்றதே என்று உறுதி நின்று வாழவும் முடியாத நிலையில் இடர்ப்படும் மனிதனின் கற்பனையில் தோன்றிய ஒன்றே 'முழுமன அமைதி' என்றால் அதைப்பெற அவன் படும் துன்பங்களைக் கண்டு இயற்கைக்கு வாயிருந்தால் நிச்சயம் சிரிக்கும்.

முழுமான அமைதி என்று ஒன்று இருக்கிறதென்றால், உலகில் அன்று தொட்டு இன்றுவரை ஒருவர் கூடவா பெற்றிருக்க முடியாமல் போய்விடும். இல்லாத ஒன்றை இருப்பதாகக் கற்பித்துக்கொண்டு இடைவிடாது அதற்காகப் போராடும், 'காற்றை வேட்டையாடும்' பண்பு மனிதனது இயல்பு போலும். ஆகவே இயற்கையோடு இயற்கையாய் ஒன்றிடும்போது கிடைத்திடும், தோன்றி, நின்று, நீங்கும் உணர்வே மன அமைதியின் நீண்ட எல்லை எனக்கொண்டு வாழ்ந்தால் எல்லோர் வாழ்வும் இனிய வாழ்வாக அமையும்.

—சென்னைப் பச்சையப்பன் கல்லூரி இதழ்

# செய்திச் சுருள்

## ஆரம்பப் பள்ளிகள் துவக்க ப. யூ. கவுன்சில்கள் கல்வி இலாகாவிடம் ஆலோசனை கேட்க வேண்டியதில்லை

சென்னை, மார்ச். 22 — சில நிபந்தனைகளுக்குட்பட்டு கல்வி இலாகாவை ஆலோசனை கலக்காமலேயே புதிய ஆரம்பப் பள்ளிக்கூடங்களை ஆரம்பிக்க பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக இன்று அசெம்பிளியில் முதன் மந்திரி திரு. எம். பக்தவத்சலம் தெரிவித்தார்.

பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் பள்ளிக் கூடங்களைத் திறப்பதற்கான நிபந்தனைகள் வருமாறு: (1) பள்ளிக்கூடம் திறக்கப்படும் பகுதியின் ஜனத்தொகை 300 பேருக்குக் குறையாமல் இருக்க வேண்டும். (2) ஒரு மைல் சுற்றுப்புறத்திற்குள் ஆரம்பப் பள்ளிக்கூடம் எதுவும் இல்லாமல் இருக்க வேண்டும்.

எனினும் இத்தகைய பள்ளிக் கூடங்களுக்கு மூன்று மாதத்திற்குள் அங்கீகாரம் பெறவேண்டும்.

## திருவள்ளுவர் தின விடுமுறை

சென்னை சர்க்கார் முடிவு

சென்னை, மார்ச். 29—திருவள்ளுவர் முக்தியடைந்த தினத்தன்று விடுமுறைவிட சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்.

வைகாசி அனுஷமாகிய அந்த நாள் இவ்வருஷம் ஜூன் மாதம் 2-ந் தேதி வருகிறது. ஜூன் 11-ந் தேதி இரண்டாவது சனிக்கிழமை விடுமுறைக்குப் பதில் ஜூன் 2-ந் தேதி விடுமுறை விடப்படும்.

இந்தத் தகவலை முதன் மந்திரி இன்று சட்டசபையில் தெரிவித்தார்.

## அருட்பாக்களின் ஆங்கில மொழி பெயர்ப்பு

முதலமைச்சர் வெளியிட்டார்

சென்னை, மார்ச். 25—ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் அருளிய 143 அருட்பாக்களின் ஆங்கில மொழி பெயர்ப்பு நூலை முதன் மந்திரி திரு. பக்தவத்சலம் இன்று வெளியிட்டார். சமரச சுத்த சன்மார்க்க சத்ய சங்கத்தின் நூற்றாண்டு விழாவை யொட்டி மயிலை ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் நூல் வெளியீட்டு விழா நடந்தது.

அருட்பாக்களை மிகச் சிறந்த முறையில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த காலஞ்சென்ற ஏ. பாலகிருஷ்ண பிள்ளையின் திறனை முதலமைச்சர் பாராட்டினார். அருட்பாக்கள் உலக முழுதுக்கும் பொருந்தும். பெரும்பாலான மக்கள் அருட்பாக்களை அறிய ஆங்கில மொழி பெயர்ப்பு உதவும் என்று அவர் சொன்னார்.

## ஏப்ரல் 1உ முதல் ஜில்லா போர்டு பள்ளிகள் சர்க்கார் பள்ளிகள் ஆகும்

சென்னை, மார்ச். 9—ஏப்ரல் 1-ந் தேதியிலிருந்து ஜில்லா போர்டு பள்ளிகள் முற்றிலும் சர்க்கார் பள்ளிகளாக ஆகிவிடும் என்று முதன் மந்திரி திரு. பக்தவத்சலம் இன்று தெரிவித்தார்.

சென்னை, கோவை கல்வி டிவிஷன்களைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர்கள் மகாநாட்டில் அவர் பேசினார்.

ஜில்லா போர்டு பள்ளிகளை சர்க்கார் மேற்கொள்ளுவதை உத்தேசித்து மேலும் பல ஜில்லா கல்வி அதிகாரிகளை நியமிக்கவும் சர்க்காருக்கு ஆட்சேபமில்லை என்றார்.

ஆரம்பப் பள்ளிகளில் 3-வது வகுப்பிலிருந்து ஆங்கிலம் போதிக்கவும், தலைமை ஆசிரியருக்கு உதவி புரியவும் மேலும் ஒரு செகண்டரி கிரேட் ஆசிரியர் இருக்க வேண்டும் என்று செகண்டரி கல்வி டைரக்டர் திரு. டைட்டஸ் தெரிவித்த யோசனையை அவர் ஒப்புக்கொண்டார். இதுபற்றி சர்க்கார் விரைவில் முடிவு செய்யும் என்று முதன் மந்திரி கூறினார்.

பள்ளிக்கூட உதவி இன்ஸ்பெக்டர்கள் பஞ்சாயத்து யூனியனுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும் என்ற கோரிக்கையை முதன் மந்திரி நிராகரித்தார். அவர்கள் கல்வி இலாகாவின் கீழ்தான் நீடித்து வருவார்கள் என்றார்.

மதிய உணவு திட்டத்துக்கு எல்லா பஞ்சாயத்து யூனியன்களும் ஒரு மாணவனுக்கு 2 பைசா வீதம் நிதி உதவி அளித்து வரவேண்டுமென்று திரு. பக்தவத்சலம் கூறினார்.

செகண்டரி கல்வி டைரக்டர் டைட்டஸ் வரவேற்புப் பேசுகையில், 4வது திட்டத்தின்போது கல்வி இலாகாவின்கீழ் ஏராளமான கட்டிடத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவிருப்பதால், மராமத்து இலாகாவைச் சேர்ந்த சில இஞ்சினீயரிங் சிப்பந்திகளை கல்வி இலாகாவுக்குத் தந்து உதவுவது பற்றி யோசித்துப் பார்க்குமாறு முதன் மந்திரியைக் கேட்டுக்கொண்டார்.

செகண்டரி கல்வி கூட்டு டைரக்டர் திரு. எஸ். வி. சிட்டிபாபு வந்தனோபசாரம் கூறினார்.

## ஆசிரியர் தொகுதியை ரத்து செய்ய வேண்டுமாம்!

### பார்லிமெண்ட் காங்கிரஸ் கட்சிக் கல்விக் கமிட்டி முடிவு

புதுடில்லி, மார்ச். 22-ராஜ்ய மேல் சபைகளில் உள்ள ஆசிரியர் தொகுதிகளை ரத்து செய்ய வேண்டும் என்று பார்லிமெண்ட் காங்கிரஸ் கட்சியின் கல்வி நிரந்தரக் கமிட்டி ஏகமனதாக முடிவு செய்துள்ளது. ஆசிரியரை ஏக காலத்தில் சட்டசபை கல்வி ஸ்தாபனம் இரண்டிலும் வேலை செய்ய அனுமதியளிக்கக் கூடாது என்று கமிட்டி கூறுகிறது.

யூனியன் கல்வி மந்திரி திரு. எம். சி. சாக்ளாவின் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

# Association Publishing House

94/95, New Street, Mannady, Madras-1.

(For High Schools and Higher Ele. Schools)

(Books approved by the Madras Text Book Committee as per new Syllabus 1965)

## SCIENCE (பொது விஞ்ஞானம்)

ஆசிரியர் : பி. வி. நாகராஜன், பி.ஏ., எல்.டி.

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| ஒன்பதாம் வகுப்பு | 1·75 | 33 | 18–5–66 |

ஆசிரியர் : கே. லக்ஷ்மிநாராயணசாமி, பி.ஏ., எல்.டி.

| | | | |
|---|---|---|---|
| ஆறாம் வகுப்பு | 1·25 | 25 | 18–5–66 |

## MATHEMATICS

ஆசிரியர் : பி. வி. நாகராஜன், பி.ஏ., எல்.டி.

புதுமுறை சங்கக் கணிதம்

| | | | |
|---|---|---|---|
| ஆறாம் வகுப்பு | 1·50 | 25 | 18–5–66 |

## HISTORY

ஆசிரியர் : த. சே. உமாபதி, எம்.ஏ., எல்.டி.

மாணவர் வரலாறு

| | | | |
|---|---|---|---|
| ஆறாம் வகுப்பு | 1·25 | 50 | 18–5–66 |

## ENGLISH NON-DETAILED TEXT

Author : Mrs. Lucy Arul Raj

Mother India Supplementary

| | | | |
|---|---|---|---|
| Reader | 0·50 | 49 | 18–5–66 |

## TAMIL NON-DETAILED TEXT

ஆசிரியர் : த. சே. உமாபதி, எம்.ஏ., எல்.டி.

அறிவுச் சுடர்

| | | | |
|---|---|---|---|
| ஆறாம் வகுப்பு | 0·62 | 22 | 18–5–66 |

# ELEMENTORY SCHOOLS

## SCIENCE

ஆசிரியர் : கே. லக்ஷ்மிநாராயணசாமி, பி.ஏ.. எல்.டி..

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| **சிறுவர் ஆரம்ப விஞ்ஞானம்** | | | |
| ஐந்தாம் வகுப்பு | 1·25 | 9 | 18–5–66 |

ஆசிரியர் : எம். விவேகானந்தா, பி.எஸ்ஸி., எல்.டி.

| | | | |
|---|---|---|---|
| **இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்** | | | |
| நான்காம் வகுப்பு | 0·75 | 6 | 18–5–66 |

## HISTORY

ஆசிரியர் : த. சே. உமாபதி, எம்.ஏ., எல்.டி.

| | | | |
|---|---|---|---|
| **சிறுவர் வரலாறு** | | | |
| ஐந்தாம் வகுப்பு | 1·00 | 42 | 18–5–66 |
| **சிறுவர் வரலாறு** | | | |
| **நான்காம் வகுப்பு** | | | |
| சென்னை | 0·87 | 11 | 18–5–66 |
| செங்கற்பட்டு | 0·87 | 12 | 18–5–66 |
| வட ஆற்காடு | 0·87 | 12 | ,, |
| தென் ஆற்காடு | 0·87 | 12 | ,, |
| சேலம் | 0·87 | 12 | ,, |
| கோயமுத்தூர் | 0·87 | 12 | ,, |
| நீலகிரி | 0·87 | 12 | ,, |
| தஞ்சாவூர் | 0·87 | 12 | ,, |
| திருச்சி | 0·87 | 12 | ,, |
| மதுரை | 0·87 | 12 | ,, |
| இராமநாதபுரம் | 0·87 | 12 | ,, |
| திருநெல்வேலி | 0·87 | 12 | ,, |

## GEOGRAPHY

ஆசிரியர் : த. சே. உமாபதி, எம்.ஏ., எல்.டி.

| | புத்தகத்தின் விலை | ஜெகஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| **சிறுவர் பூகோளம்** | | | |
| ஐந்தாம் வகுப்பு | 1·00 | 19 | 18–5–66 |

ஆசிரியர் : த. சே. உமாபதி, எம்.ஏ., எல்.டி.

| | | | |
|---|---|---|---|
| **சிறுவர் பூகோளம்** | | | |
| நான்காம் வகுப்பு | | | |
| சென்னை | 0·62 | 46 | 18-5-66 |
| செங்கற்பட்டு | 0 62 | 19 | ,, |
| வட ஆர்க்காடு | 0·62 | 18 | 18-5-66 |
| தென் ஆர்க்காடு | 0·62 | 18 | ,, |
| சேலம் | 0·62 | 19 | ,, |
| கோயமுத்தூர் | 0·62 | 19 | ,, |
| நீலகிரி | 0·62 | 19 | ,, |

## MATHAMATICS

ஆசிரியர் : பி. வீரராகவன்

| | | | |
|---|---|---|---|
| **சிறுவர் கணக்கு நூல்** | | | |
| மூன்றும் வகுப்பு | 0·87 | 37 | 18–5–66 |

1966-67-ஆம் ஆண்டுக்கு III முதல் VI-ஆம் வகுப்புகள் வரையில், புதிய புத்தகங்கள் மாற்றப்படவேண்டும்.

VII, VIII-ஆம் வகுப்புகளுக்குப் பழைய புத்தகங்களையே தொடர்ந்து வைத்துக்கொள்ளலாம்.

✻

**அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்**

(" ஆரம்பக்கல்வி " நிலையம்)

**94–95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.**

தபால் பெட்டி எண் 1818. டெலிபோன் எண் 24544.

# கோபால கிருஷ்ண கோகலே

ஏ. டி. கிருஷ்ணமாச்சாரி

பம்பாய் இராச்சியத்தில் ரத்னகிரி ஜில்லாவில் சிப்ளூன் தாலூக்காவில் காட்லூக் கிராமத்தில் 1866-ம் ஆண்டு மே மாதம் 9-ந் தேதி கிருஷ்ணுராவ் கோகலே என்கின்ற ஏழை பிராம்மண குமாஸ்தாவின் இரண்டாம் மகனுகப் பிறந்தார் கோபால கிருஷ்ண கோகலே. பத்தாம் பிராயத்தில் கொல்ஹாப்பூரில் அண்ணன் கோவிந்த கிருஷ்ண கோகலேயுடன் படிக்கச் சென்றார். 1879-ல் தந்தை காலமாஞர். கோவிந்தன் தன் படிப்பை நிறுத்திக் கொண்டு 15 ரூபா சம்பளத்துக்கு வேலையில் அமர்ந்து குடும்பத்தை ரட்சித்துத் தம்பியை நன்ருய்ப் படிக்க வைத்து அக்கால வழக்கப்படி தம்பிக்கு 15-வயதிலேயே ஒரு பெண்ணைத் தேடித் திருமணமும் முடித்து வைத்தார்.

## பி. ஏ. பட்டம் பெறுதல்

மறுவருஷமே கோபால் மெட்ரிகுலேஷன் தேறினர். கொல்லாப்பூர் ராஜாராம் கல்லூரியில் சேர்ந்தார். அடுத்த ஆண்டு பூனு சென்று தக்காண கல்லூரியில் சேர்ந்து எப். ஏ. படித்து பி. ஏ. வந்தார். மறுவருஷம் பம்பாய் எல்பின்ஸ்டன் கல்லூரியில் படித்து பி. ஏ. பட்டம் பெற்ருர். அங்குதான் ஆங்கிலக் கவியரசர் ஓர்ட்ஸ் வொர்த்தின் பேரன் பேராசிரியர் ஓர்ட்ஸ் வோர்த்தின் நன்மதிப்பைப் பெற்ருர். பின் நாட்களில் வெள்ளைக்காரர்களிலும் நல்லவர்கள் உண்டு என்று காட்ட இவ் வோர்ட்ஸ் வொர்த்தையும் பூனுவில் பாதிரிமார் கல்லூரியின் பிரின்சிபல் ஸெல்பியையும் உதாரணம் காட்டுவது கோகலேயின் வழக்கம்.

## ஆசிரியப் பணி நோன்பு

அந்நாட்களில் பி. ஏ. பட்டம் பெற்றவுடனே அரசாங்க உத்தியோகம் தேடி வரும். கோபாலோ அவற்றில் மோகம் கொள்ளவில்லை. பால கங்காதர திலகர், அகர்க்கார், ஆப்தே முதலியோரைப் பின்பற்றி, நாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று மாதம் 75 ரூபா சம்பளத்தில் இருபதாண்டு காலம் கல்லூரிப் பேராசிரியர் தொழில் செய்கிறேன் என்று பிரதிக்ஞை பண்ணி பூனு பெர்குஸன் கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்தார். அதோடு தக்காண கல்விக் கழகத்தில் ஜீவிய சந்தாதாரராக சேர்ந்தார் "மாராட்டா" பத்திரிகையில் கட்டுரைகள் எழுதி வலாஞர்.

## ரானடேயுடன் முதல் சந்திப்பு

மகாராஷ்டிரத்தில் மிகச் சிறந்த தலைவரான நீதிபதி மஹாதேவ கோவிந்த ரானடேயுடன்

இவருக்கு அறிமுகம் ஏற்பட்டது. நியூ இங்கிலீஷ் ஸ்கூலில் கோகலே ஒரு துணை ஆசிரியர். அங்கே ஒரு விழாவுக்கு ஏற்பாடு செய்து எல்லாப் பிரமுகர்களுக்கும் அழைப்பு விடுத்து நுழைவுச் சீட்டும் அனுப்பி இருந்தார்கள். ரானடே சீட்டை மறந்து விட்டு வந்தார். தலைவாசலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கோகலே அவரைச் சீட்டில்லாமல் உள்ளே விட மறுத்து விட்டார். இதை அறிந்த மற்ற ஆசிரியர்கள் ஓடிவந்து கோகலேயைக் கடிந்து கொண்டார்கள். கடமையில் கருத்தாய்ப் பணி புரிந்த பத்தொன்பது பிராய வாலிபன் பேரில் நீதிபதி ரானடேயின் அன்பு விழுந்தது. அன்று முதல் ஆயுள் முழுதும் ரானடே கோகலேயின் வளர்ப்புத் தந்தை போல, பிரியா நண்பராகவும் குருவாகவும் விளங்கினார்.

## இரண்டாம் திருமணம்

அதே ஆண்டு கல்லூரியின் பொறுப்பேற்ற சர்வஜன சபையின் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதற்கென ஊதியம் 40 ரூபாயை வேண்டாம் என்று தள்ளி விட்டார். "சுதாராக்" என்கிற ஆங்கில-மராட்டி பத்திரிகையில் ஆங்கிலக் கட்டுரைகள் எழுதி வரலானார். இளமையில் பொம்மைக் கலியாணம் செய்த மங்கை ஏதோ உடல் நலிவினால் மணவாழ்க்கைக்கு லாயக்கில்லாமல் போய் விட்டது. அவளுடைய சம்மதம் பெற்று 1887-ல் மறுமணம் செய்து கொண்டார். அவர்களுக்கு இரண்டு குமாரத்திகள் பிறந்தார்கள். இரண்டாந்தாரம் மணந்து கொண்ட 'பாவத்தின்' காரணமாகப் பின்னால் இவர் சமூகச் சீர்திருத்தங்களில் பெரும் பங்கு கொண்டிருந்த போதிலும், "பெண்டிர்", 'திருமணம்' ஆகியவற்றைப் பற்றிப் பேசவோ எழுதவோ துணியாமல் வாய்மூடி மவுனியாகவே இருந்து விட்டார்.

## பேசாத பிரசங்கம்

ஒரு லஞ்ச ஊழல் வழக்கில் சாட்சி சொல்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க மாட்டோம் என்று உறுதி அளித்த பம்பாய் கவர்னர் நிலையை ஆதரிப்பதற்காக பூனாவில் ஒரு பொதுக் கூட்டம் நடந்தது. அதில் பேசுவதற்கு கோகலே ஒரு பிரசங்கத்தை எழுதிக் கொண்டு வந்தார். கூட்டத்தில் சல சலப்பினால் படிக்க வாய்ப்பில்லை. படித்ததாகவே கருதுகிறோம் என்று பிரசங்கத்தின் நகலைப் பெற்றுக் கொண்டார்கள். தற்செயலாக அப்பிரதி பத்திரிகை நிருபர்கள் கைக்கெட்டி டைம்ஸ் ஆப் இந்தியாவிலும், பம்பாய் கெஜட்டிலும் வெளிவந்தது. அதைப் படித்தவர்கள் கோகலேயின் சொல் ஆட்சி, வாதத்திறன் இலக்கியநயம், இன்சொல் பயன் முதலான நற்பண்புகளைப் பாராட்டி, இவர் வருங்காலத்தில் நாட்டின் தலைவராக விளங்குவார் என்று தீர்க்க தரிசனம் கூறினார்கள்.

## காங்கிரஸ் காரியதரிசி

பம்பாயில் 1889-ல் கூடின காங்கிரஸ் மகா சபைக்கும் கல்கத்தாவில் 1839-ல் கூடின காங்கிரஸ் மகாசபைக்கும் பிரதிநிதியாகப் போனார். உப்பு வரியைக் குறைக்க வேண்டும் என்று பேசினார். நாகபுரி காங்கிரசிலும் 1891-ல் பேசினார். 1892-ல் அலகாபாத் காங்கிரசில் சர்க்கார் உத்தியோக நியமனங்களைப் பற்றிப் பேசினார். 1895-காங்கிரசில் மகாசபையின் காரியதரிசி ஆனார். மறுவருஷம் காந்திஜியைச் சந்தித்தார். அதே ஆண்டு இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும நிதிவிஷயமான பிரச்னைகளை ஆராய லார்டு வெல்பி தலைமையிலும் ஒரு கமிஷன் ஏற்படுத்தப்பட்டது. அந்த லார்டு வெபி முன்பு சாட்சியம் கூற சென்னையிலிருந்து ஜி. சுப்பிரமணிய அய்யரும், வங்காளத்திலிருந்து சுரேந்திரநாத் பானர்ஜியும், பம்பாயிலிருந்து டின்ஷா ஈவாசாவும் பூனாவிலிருந்து கோகலேயும் ஆகநாலு பிரதிநிதிகள் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டார்கள்.

## பிளேக்கும், அவமானமும்

கோகலே இங்கிலாந்தில் இருக்கையில் பூனாவில் பிளேக் என்கிற கொள்ளை நோய் பரவிற்று. சுகாதார அதிகாரிகளால் சமாளிக்க முடியாமல் போகவே ராணுவம் வந்து துப்புரவு வேலை, நோயாளிகளைத் தனிமைப்படுத்தும் வேலை, சிகிச்சை வேலை சகல வேலைகளையும் மேற்கொண்டது. பயத்தினாலும், அறிவின்மையாலும் எழுத்து வாசனையும் சமூகக் கட்டுப்பாடும் இல்லாத பாமர மக்கள் நன்மை செய்ய வந்த வெள்ளைச் சிப்பாய்களைப் பகைவராகப் பாவித்து இரவில் இருவரைக் கொலை செய்து விட்டனர். சிப்பாய்கள் இந்தியரை இம்சித்தனர் என்றும் பெண்களைக் கற்பழித்தனர் என்றும் சிலர் கோகலேக்கு இங்கிலாந்துக்குக் கடிதம் எழுதினர். அவரும் அதை நம்பிப் பத்திரிகைகளில் வெளியிட்டுவிட்டார். மறு நாளே பம்பாய் கவர்னர் மறுப்பு வந்தது. இவருக்கெழுதினவர்கள் தங்கள் பெயர்களை வெளியே சொல்ல வேண்டாம் என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்கள். கோகலே அவர்களைக் காட்டிக் கொடுக்கவில்லை. தாம் தவறு செய்ததற்கு நிபந்தனையில்லாமல் மன்னிப்புக் கோரிப் பத்திரிகைகளில் பிரசுரித்தார். அவமானம் ஏற்க வேண்டி வந்தது.

## அவர் பெற விரும்பியவை

டைரி எழுதாதே. எழுதினால் அதில் யாராவது தேச பக்தரைப் பற்றி எழுதி விடுவாய். அவர் கைப்பட எழுதியிருப்பதைக் கவனிப்போம்.

1. நான் தினந்தோறும் யோகம் பயில்வேன்.

2. சரித்திரம், தத்துவம், வான சாஸ்திரம், பூகர்ப்ப சாஸ்திரம், உடற்கூறு சாத்திரம், மனோ தத்துவ சாஸ்திரம், இவற்றில்

நிறைய புலமை பெறுவேன். சாஸ்திரங்கள் போதும். பிரஞ்சு மொழி பயில்வேன்.

3. நான் அங்கத்தினர் ஆக முயல வேண்டியவை.

அ. பம்பாய் சட்டசபை.

ஆ. வைசிராய் சட்டசபை.

இ. பிரிட்டிஷ் பார்லிமெண்டு

இச்சபைகளில் என்னாலான வகையிலெல்லாம் என் நாட்டார்க்கு இனிதே செய்வேன்.

4. ஈடற்ற தத்துவ சமயம் ஒன்றை உலகு முழுவதுக்கும் உபதேசிப்பேன்.

முப்பத்திரண்டாம் பிராயத்தில இப்படி ஒரு சிந்தனை சென்றதென்றால், அவர் தலைவர் ஆவதற்குக் கேட்பானேன்.

## கவர்னர் சபைப் பதவி

பூனா நகர சபையில் சில ஆண்டுகள அங்கத்தினராகவும், பின்னர் தலைவராகவும் இருந்தவர். நகர சபைகளின் சார்பில் பம்பாய் சட்ட சபைக்கு 1899-ல் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே ஆண்டில் தான் இளைய மனைவி காலமானார்.

அதன் பின்பும் மூன்றாண்டுக் காலம் கல்லூரி ஆசிரியர் பணி புரிந்தார். பதினெட்டாண்டு தக்காண கல்விக் கழகத்தில் பணி ஆற்றி, ஆங்கிலம், கணிதம், சரித்திரம்மூன்றிலும்சிறப்பாகப் போதித்து, ஒருபுதிய தலைமுறையை உருவாக்கினார். சட்ட சபைப் பணிக்கு அடிக்கடி பூனாவை விட்டுப் போக நேர்ந்தமையால் அவருக்கு மிகவும் பிடித்தமான ஆசிரியர் பணியை அரை மனதுடன் 1902 செப்டம்பர் 19-ஆம் தேதி விட்டு விட்டார். வழி அனுப்பு உபசாரத்துக்கு நன்றி கூறி, அவர் புரிந்த பிரசங்கம் உருக்கமானது. மாணவ உலகுக்கு பல அருங் கருத்துக்களைக் கொண்டது. வாய்ப்பு இருந்தால் மீண்டும் வந்து ஆசிரியர் பணி புரிவேன் என்று உறுதி அளித்தார்.

## வைசிராய் சபைப் பதவி

அதே ஆண்டு ஸர் பிரோஷ்ஷா மேத்தா வைசிராய் சட்டசபையிலிருந்து ஓய்வு பெற்றார். அந்த இடத்துக்கு கோகலே தேர்ந்தெடுக்கபபட்டார். அன்று முதல் ஆயுள் முழுவதும் அப்பதவியில் இருந்தார். அப்போது வைசிராயாயிருந்தவர் திமிர் பிடித்த லார்ட் கர்சன் பிரபு. ஒவ்வோர் ஆண்டும் பட்ஜெட் விவாதத்தில் கோகலே ஆற்றிய சொற்பொழிவுகள், சரித்திரப் பிரசித்தி பெற்றவை. வெள்ளையரை எதிர்த்துப் பேச ஆள் இல்லாத அந்தக் காலத்தில் அவர்களுடன் சரி நிகர் சமானமாக உட்காரவும், அவர்களை வியந்து கேட்கும் வண்ணம் இனிமையான முறையில் தைரியமாக எதிர்ப்புத் தெரிவிக்கவும் அதனால் சிறுகச்சிறுக பிரிட்டனிலும் இங்கும் ஆளுவோர்கள் மனம் மாறவும் செய்த பெருமையும் அவருக்குண்டாயிற்று. அதிக வரி, உப்பு வரி, ராணுவச் செலவு, ஜவுளி வரி, கலால்வரி, கல்வி, இந்தியர்களுக்கு உத்தியோகங்கள், கலாசாலை சட்டங்

கள், முதலியவை பற்றி அவர் போராடின கொள்கைகள் பின்னால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. கோகலேயின் சேவைகளைப் பாராட்டி, அரசாங்கத்தார் அவருக்கு சி. ஐ. இ. (இந்திய சாம்ராஜ்யத்தில் மன்னரின் துணைவர்) என்கிற பட்டத்தை அளித்து கௌரவித்தார்கள்.

## இந்திய ஊழியர் சங்கம்

1905-ம் ஆண்டு ஜூன் மாதம் 12-ந் தேதி இந்திய ஊழியர் சங்கத்தைத் தோற்றுவித்தார். சங்கத்தின் சட்ட திட்டங்களை வகுத்தார். நாட்டின் விடுதலைக்கும், மக்களின் உயர்வுக்கும் தன்னலமற்ற பட்டதாரிகள் அணி ஒன்றை உருவாக்குவதே அதன் நோக்கம். அங்கத்தினர்கள் பிரதிக்ஞை ஏழு அம்சங்கள் கொண்டது. அவை வருமாறு :-

1. என் நெஞ்சில் நாட்டுக்கே முதல் இடம்; நாட்டுச் சேவைக்கே என்னாலானது எல்லாம் செய்வேன்.

2. நாட்டுச் சேவையில் எனக்கென்று ஒன்றும் விரும்பேன்.

3. இந்தியர் அனைவரும் என் சகோதரர்; சாதி, மதம், பாகுபாடு பாராமல் அனைவருடைய முன்னேற்றத்துக்கும் பாடுபடுவேன்.

4. தூய வாழ்வு வாழ்வேன்.

5. யாருடனும் சச்சரவிடமாட்டேன்.

6. சங்கத்தின் நோக்கங்களைச் சதா மனத்தில் கொண்டு அவற்றிற்கு முரணாக எதும்செய்யாமல், அவை நிறைவேற உழைத்து வருவேன்.

## காங். அக்கிராசனர் பதவி

காசியில் கூடிய அந்த ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபைக்கு அக்ராசனம் வகித்தார். முப்பத்தொன்பது வயது இளைஞர் அக்ராசனம் வகித்தது இவர் ஒருவர்தான். காங்கிரஸ் மகாசபை தீர்மானப்படி, அடுத்த ஆண்டும் இங்கிலாந்துக்குச் சென்று, அப்போது இந்தியா மந்திரியாக இருந்த மார்லி பிரபுவுக்கு பிரச்சினைகளை எடுத்துரைத்த பின்னர் சட்டமான மிண்டோ—மார்லி சீர்திருத்தங்களுக்கு வித்திட்டார். 1907-ல் பிரிட்டிஷ் அரசாங்கம் லாலா லஜபதி ராயை நாடு கடத்தியது. அதனால் கொந்தளிப்பு ஏற்பட்டது. அரசு செய்த தவறை இவர் எடுத்துரைத்தது பற்றி வைசிராய் சீறினார். அதே ஆண்டில் கோவிந்த கிருஷ்ண கோகலே காலமானார். வட இந்தியா முழுவதும் பட்டணம் பட்டணமாகச் சுற்றுப் பிரயாணம் செய்து, உப்பு வரி நீக்கவும், இலவசக் கட்டாயக் கல்வி அளிக்கவும், அரசியல் உரிமைகள் பெறவும் பிரசங்கங்கள் புரிந்தார்.

## திலகர் வழக்கு

சூரத்தில் 1907-ல் கூடின காங்கிரஸ் மகாசபை மிதவாதிகள் என்றும், தீவிர வாதிகள் என்றும், இரு பிளவாகப் பிரிந்தது. கோகலே மிதவாதி என்று தூற்றப்பட்டார். பாலகங்காதர திலகர் தீவிர வாதி என்று போற்றப்

பட்டார். இரு கோஷ்டிகளுக்கும் பகை மூண்டது. அடுத்த ஆண்டு இங்கிலாந்து சென்று, பார்லிமெண்டு கமிட்டி முன் சாட்சியம் கூறினார். மிண்டோ மார்லி சட்டம் வந்தது. அதைத் திலகர் கண்டித்தார். அவரைக் கைது செய்து விசாரணை நடத்தி ஆறு வருஷம் கடுங்காவல் விதித்தது பிரிட்டிஷ் அரசாங்கம். கோகலேதான் தூண்டினார் என எழுதிய பத்திரிகைகள் மீது அவதூறு வழக்குப் போட்டு, வெற்றி பெற்றுத் தன் மாசில்லாத் தன்மையை ஸ்தாபித்தார். சென்னையில் கூடிய காங்கிரஸ் மகா சபைக்கு விஜயம் செய்து, தமது குருவான ரானடே பெயரால் ஒரு கழகத்தை நிறுவினார். இவர் பேச்சு வன்மையை வியந்து, அமெரிக்காவில் பல இடங்களில் சொற் பொழிவு ஆற்றும்படி வந்த அழைப்பை மறுத்துவிட்டார்.

## நிதி மந்திரி தகுதி பெற்றவர்

கங்காணி கூலி முறையை ஒழிக்க வேண்டும் என்று இவர் கொண்டு வந்த தீர்மானம் வைசிராய் சட்ட சபையில் நிறைவேறியது. ஆரம்பக்கல்வி பற்றி ஒரு தீர்மானத்தை தாக்கல் செய்தார். நிறைவேறாது என்று தெரிந்தவுடன் அதை வாபஸ் பெற்றார். பத்திரிகைச் சட்டத்தைக் கண்டித்தார். ராஜத் துரோகக் கூட்டங்கள் தடைச் சட்டத்தை எதிர்த்தார். அலகாபாத்தில் காங்கிரஸ் மகா சபை கூடிய போது, அக்கிராசனர் சர் வில்லியம் வெட்டர்பனுக்குக் காரியதரிசியாக வேலை செய்தார். வைசிராய் சட்டசபையில் போலீஸ் இலாகா கங்காணிக் கூலி முறை ஸ்தல ஸ்தாபனங்கள், நிதி நிலை முதலிய பெரும் விஷயங்களை விளக்கிப் பேசினார். இவர் கொண்டு வந்த கல்வி மசோதா தோற்றது. அதே ஆண்டு ஐந்தாம் முறையாக இங்கிலாந்து சென்றார். இங்கிலாந்தில் காங்கிரஸ் கருத்துக்களை எடுத்துரைக்க சர். வில்லியம் வெட்டர் பர்ன் பல கூட்டங்களை ஏற்பாடு செய்தார். அவற்றில் கோகலேயும் லஜபதிராயும் பேசினார்கள். கோகலே வரத் தாமதமான ஒரு சமயம் அப்போது கேம்பிரிட்ஜில் மாணவராயிருந்த சி. ஆர். ரெட்டியும் பேசினார். அவர் உப தலைவராயிருந்தமையால், கேம்ப்ரிட்ஜ் சர்வகலாசாலைக்கு கோகலேயை அழைத்து, பேச வைத்து காஷ்மீர் திவான் அமர்நாத் மகன். பத்திரிநாத்தைக் கொண்டு விருந்து வைத்து உபசரித்தார். அங்கு மாணவராயிருந்த ஜே. எம். கீன்ஸ் புலமையை மெச்சி, அவர் நிதி மந்திரியாக வந்தால், இந்தியாவுக்கு நன்மை என்றாராம் கோகலே. பின்னால் கீன்ஸ் அடைந்த சர்வதேச புகழைப்பார்த்தால், கோகலேயின் தீர்க்க தரிசனம் விளங்கும். அதே போல கோகலேயின் பொருளாதாரப் புள்ளி விவரத் துண்ணறிவை வியந்து லார்டு கிச்சனர் நான் வைசிராயானால் "கோகலேயையே நிதிமந்திரியாக

வைத்துக் கொள்ளுவேன்” என்ருராம்.

### சக்கரவர்த்தியுடன் சமபந்தி விருந்து

தென் ஆப்பிரிக்கா செல்ல கப்பல் டிக்கட் வாங்கச் சென்ருர் கோகலே. கேபின் இரண்டு சீட் கொண்டது. ஒன்றில் இந்தியர் ஏறிக் கொண்டால், அவரோடு அதே கேபினில் தென் ஆபிரிக்க வெள்ளைக்காரர் மற்ருெரு சீட்டில் ஏறிக் கொள்ள மாட்டார்கள் என்ருர் டிக்கட் விற்பவர். அதற்குக் கோகலே மற்றவர்கள் வரமாட்டார்கள் என்பதற்காக நான் இரண்டு டிக்கட் வாங்க மாட்டேன். எனக்கு டிக்கட் தரமாட்டேனென்ருல் கப்பல் கம்பெனி முதலாளி லாயட்சதர்லண்டிடம் சொல்வேன் என்ருராம். தகராறு முற்றி விடக் கூடாதென்று டிக்கட் கொடுத்துவிட்டார்கள். தனிக் கேபின் கிடைத்தது. இந்தியா மந்திரிக்கு இது எட்டிவிட்டது. தென் ஆப்பிரிக்காவிலும் இது போல் ஏதும் நேர்ந்துவிடக் கூடாதே என்று அவர் ஒரு யுக்தி செய்தார். அது ராஜ தந்திரம், ஒரு விருந்து வைத்தார். கோகலேயை விருந்தினராக அழைத்தார் மாட்சிமை தங்கிய ஜார்ஜ்மன்னரையும் விருந்துக்கு வந்து பிரசன்னமாக இருக்கச் செய்துவிட்டார். இப்படி கோகலே தென் ஆபிரிக்காவுக்குப் பயணம் ஆகும் போதே ராஜாவுடன் சம பந்தியில் சாப்பிட்டவர் என்ற விருதுடன் சென்ருராம். கப்பலில் நடந்த விருந்துக்குக் கப்பல் கேப்டனே ஆள் விட்டு அழைத்தாராம். அதோடு நில்லாமல் அங்கு நடந்த இலக்கியப் போட்டியிலும் பரிசைத் தட்டிக் கொண்டு வந்தார். தென் ஆபிரிக்காவில் ஜெனரல் போதாவும், ஜெனரல் ஸ்மட்ஸும் இவருடைய கவுரவ தோரணையை வியந்து, சமரசத்துக்கு வந்தார்கள். உடன்பாடு ஏற்பட்டது.

### கெ. சி. ஐ. ஈ. வேண்டாம்

தென் ஆபிரிக்காவுக்குப் போய் நம் மக்கள் படும் இன்னல்களை நேரில் கண்டு தென் ஆப்ரிக்க சர்க்கார் விதித்திருந்த 3 பவுன் தலைவரியை நீக்கச் செய்தார். பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மெம்பராக நியமிக்கப்பட்டார். அது பற்றி ஒரு கமிஷன் முன் சாட்சியம் கூற ஆறும் முறை இங்கிலாந்து சென்ருர். தென் ஆப்ரிக்கா போராட்டத்துக்குப் பொருள் திரட்டினர். ஏழாம் முறையும் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் வேலையாகவே இங்கிலாந்து சென்ருர். இவர் சேவைகளைப் பாராட்டி வைசிராயும் ஜார்ஜ் மன்னரும் இவருக்கு கே. சி. ஐ. ஈ. பட்டம் வழங்க முன் வந்தார்கள். இவரோ அதைப் பாராட்டி விட்டுத் தமக்கு அத்தனை பெரிய கவுரவம் தாங்காது என்று நயம்பட உரைத்து ஒதுக்கி விட்டார்.

### ரகசிய அரசியல் சாசன நகல்

தென் ஆப்ரிக்கப் போராட்டம் காந்தி ஸ்மட்ஸ் ஒப்பந்தத்துடன் வெற்றி அடைந்தது. அப்

போது கோகலே லண்டனில் காந்தியைச் சந்தித்தார். காங்கிரசில் முஸ்லிம்கள் முஸ்லிம் அல்லாதார் என்ற இரு பிரிவுகளை இணைக்க முயன்று தோல்வி கண்டனர். அது பற்றிப் பத்திரிகைகளிலும் பிரசங்க மேடைகளிலும் எங்கு பார்த்தாலும் ஓயாத சர்ச்சை நடந்தது. காந்திஜி இந்தியா வந்தார். பத்து ஆண்டுகட்கு முன் அவர் வந்த போது கல்கத்தாவில் கோகலேயின் விருந்தாளியாக ஒரு மாத காலம் தங்கினார். அங்கிருந்துதான் சாந்திநிகேதனம் சென்று குருதேவ் ரவீந்திர நாத டாகுரைப் பார்த்துப் பழகப் பிடித்துப் போனார். இப்போதும் கோகலே வீட்டுக்கு வந்து தங்கி அவர்தான் என் அரசியல் குரு என்று பகிரங்கமாகக் கூறினார். அன்று கவர்னராயிருந்த லார்டு வில்லிங்டன் விருப்பப்படி கோகலே இந்தியாவுக்குத் தேவையானது, திருப்தி அளிக்கக் கூடியது, காரியசாத்தியமானது என்றொரு அரசியல் திட்டத்தை விரைந்து இரகசியமாகக் கொடுத்தார். பின் நாட்களில் 1917-ல் ஆகா கான் அதன் நகலை வெளியிட்டார். ஐம்பது ஆண்டுகளுக்கு முன் அவர் கோரிய அனைத்தும் இன்று நிறைவேறி உள்ளன.

## அவ்வுலக வாழ்வு எப்படி ?

தென் ஆப்ரிக்கா இந்தியர்களுக்கும், பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்கும் கடுமையாக உழைத்ததனால் அவருடைய உடல் நலம் குன்றியது. ஏற்கெனவே இருந்த சர்க்கரை வியாதி முற்றியது. அதோடு காங்கிரஸின் "லட்சியம்" என்ன என்பது பற்றித் தலைவர்களுக்குள்ளே கடும் போர் நடந்து வந்தது. கோகலே விருப்பம் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்குள் ஒரு டொமினியன் ஆவதற்கு சட்ட ரீதியான முறையில் பாடுபடுவதுதான். இதை தீவிர வாதிகள் ஏற்கவில்லை. இது அவருக்கு வேதனை தந்தது. நோய்வாய்ப்பட்டு இளைத்து கடைசியில் நாற்பத்தொன்பதாம் பிராயத்தில் 1915 பிப்ரவரி 19-ந் தேதி "இந்த உலக வாழ்வை நன்றாக அநுபவித்தேன். அந்த உலகவாழ்க்கை எப்படி இருக்கிறது, போய்ப் பார்க்கிறேன்" என்று கூறியபடியே உடலை விட்டார்.

## கோகலே நினைவுச் சின்னங்கள்

கோகலேக்கு ஆண் சந்ததி இல்லை. இரண்டு பெண்கள்தான் இருந்தனர். மூத்த மகளுக்கு ஒரு ஐ. சி. எஸ். காரர் (மராட்டியர் தான்) கணவராக வாய்த்தார். உயர்நீதி மன்றத்தில் நீதிபதியாகப் பதவி வகித்து ஓய்வு பெற்று இன்று நம்மிடையே இருக்கிறார். இவர்களை விட அவருடைய மாணவர்களாகவும், தொண்டர்களாகவும், அரசியல் சீடர்களாகவும் விளங்கினோர் எண்ணிக்கை பெரியது. அவர் பெயரால் அன்னிபெசண்ட் அம்மையார் சென்னையில்

கோலே மண்டபம் கட்டி வைத்தார். பூனாவில் கோகலே ஞாபகார்த்த அரசியல் கல்வி ஸ்தாபனம் இயங்கி வருகிறது. அதில் படித்துப் பட்டம் பெற்றவர்கள் தான் தொழிலாளர் நல இலாக அதிகாரி (வெல்பேர் ஆபீசர்களாகப் பணி புரிகிறார்கள்.) இவர் பெருமையை நாம் ஒருவாறு புரிந்து கொள்ளத்தான் மகாத்மா காந்தி இவரைத் தமது அரசியல் குரு என்று வர்ணித்தார்போலும். கோகலே மறைந்ததும் காந்தியுகம் நாட்டில் பிறந்தது.

## பாரத நாடுதான் தெய்வம்

கோகலேயின் மதம் எது? அவருக்கு பகவத் கீதை, சாந்தி பர்வம் மனப் பாடம். விக்ரமோர் வசியம் பூரா ஒப்புவிப்பார். பர்க் பிரசங்கங்கள் கூட மனப்பாடம். இந்து, முஸ்லிம், பார்சி, கிறிஸ்துவர் என்ற பேதம் அவருக்கில்லை. இந்திய நாடு தான் அவர் வணங்கும் தெய்வம். நாட்டுப் பக்தி. அந்தக் கருத்தில் தான் "தேச ப்ரீத்" என்ற சொற்றொடரை அவர் கையாண்டார். தேச சேவைதான் பூஜை. தேச விடுதலை மோட்சம். இதை விடத் தெளிவான மதம் வேண்டுமா? தேச சேவையே தேவ சேவை.

—தினமணி


"ஆரம்பக் கல்வி"
ஆபீஸ்.
94-95, புதுத்தெரு,
மண்ணடி, சென்னை-1.

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ 2-00

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-00

வருடாந்திர பிராவிடெண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

Form of Certificate of income
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

தபால் செலவு பிரத்யேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் பாரங்களை அனுப்ப தபால் செலவு:

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

# நேரம் அளந்த கதை

டார்லி சகானி

[பண்டைக் காலத்தில் பல்வேறு நாடுகளில் மக்கள் நேரத்தை எவ்வாறு அளந்து வந்தார்கள் என்பதை இக்கட்டுரை சுவை மிக்க முறையில் எடுத்துக் காட்டுகிறது. இக் கட்டுரை, "சென்ட்ரல் ரயில்வே மாகசின்" என்னும் ஆங்கில இதழில் வெளியான ஆங்கிலக் கட்டுரையின் தமிழாக்கம். தமிழ் வடிவில் இக் கட்டுரையை அளித்தது, "மஞ்சரி" மாத இதழ்.]

சூரிய சந்திர நட்சத்திரங்களின் போக்கைக்கொண்டு கணக்கிடாமல் மனிதன் தன் சொந்த யுக்தியினால் அளந்து கணக்கிடாமல் கண்டுபிடித்த யந்திரம் கடிகாரம். 'க்ளாக்' என்ற சொல் பிரெஞ்சுமொழியிலிருந்து வந்தது. அதற்கு 'மணி' என்பது அர்த்தம்.

ஒரு கண நேரம் என்பதைப் பலர் பலவிதமாக வர்ணிப்பார்கள்: "கண்ணிமைக்கும் நேரத்துக்குள்" என்று நாம் சகஜமாகச் சொல்கிறோம். இதையே ஆப்பிரிக்காவை அடுத்திருக்கும் மடகாஸ்கர் தீவில் வாழ்பவர்கள், "வெட்டுக் கிளி பறக்கும் நேரத்தில்" என்கிறார்கள்; அமெரிக்காவிலுள்ள இல்லினாய்ஸ் பிரதேசத்துக் குடியானவர்கள், "ஆட்டுக்குட்டி வாலை மேலுங் கீழும் அடித்துக்கொள்ளும் நேரத்தில்" என்று சொல்லுகிறார்கள். நேரத்தை அளக்கத் தீ, மணல், நீர் இவை ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகப் பயன்பட்டு வருகின்றன.

கி. பி. 9-ஆம் நூற்றாண்டில் தன் கஷ்ட காலத்தில் மகா ஆல்ஃப்ரட் என்ற அரசன் ஒரு கிழவியின் குடிசையில் மாறு வேஷத்தில் தங்கியிருந்தான். ஒரு நாள் அந்தக் கிழவி, அடையைக் காந்தாமல் கவனித்துக்கொள்ளும்படி அவனிடம் சொல்லிவிட்டு வெளியில் போனாள். மேலே எப்படிப் போரை நடத்தி வெற்றி பெறுவது என்று ஆல்ஃப்ரெட் அப்போது எண்ணமிட்டுக் கொண்டிருந்தான். அதனால் நேரம் போனதே தெரியவில்லை; அடைகாந்திவிடவே அவன் கிழவியிடம் திட்டுக் கேட்டுக்கொண்டான். ஆல்ஃப்ரெட் நேரத்தைக் கணக்கிடுவதற்கென்றே ஆறு மெழுகுவர்த்திகளை ஏற்றி வைப்பானாம். ஒவ்வொன்றும் 12 அங்குல நீளம். ஓர் அங்குலம் விட்டு ஓர் அங்குலத்துக்கு வெளுப்பு

அல்லது கறுப்புக் கோடு இட்டிருக்கும். ஒரு மணி நேரத்துக்கு மூன்று அங்குல வீதம் மெழுகுவர்த்தி கலைந்துகொண்டே வரும். இப்படித் தொடர்ந்து இந்த மெழுகுவர்த்தி விளக்குகளை ஒரு நாள் முழுவதும் வரும்படி ஏற்றிக்கொண்டே போவார்கள். எட்டு மணி நேரம் மத சம்பந்தமான விஷயங்களையும், எட்டு மணி நேரம் பொது விவகாரங்களையும் ஆல்ஃப்ரெட் கவனிப்பான்; மீதி எட்டு மணி நேரம் உறங்குவது அல்லது ஓய்வு எடுத்துக்கொள்வதில் ஈடுபடுவான்.

ரோம்வாசிகள் கடிகாரம், விளக்கு இரண்டையும் இணைத்து நேரத்தைக் கணக்கிட்டார்கள். செங்குத்தான ஒரு கண்ணாடிக் குழாயின்மேல் மணிக்கணக்கைக் குறிக்கப் பளிச்சென்று எண்கள் எழுதியிருக்கும். அந்தக் குழாயில் குறிப்பிட்ட நேரத்தைக் காட்டும் எண் வரைக்கும் எண்ணெய் விட்டு வைப்பார்கள். எண்ணெய் வற்ற வற்ற நேரம் இவ்வளவு என்று தெரியும். 25-ஆண்டுகளுக்கு முன்னால்கூட இந்த மாதிரி கடிகாரங்களை ஹாலந்திலும் ஜெர்மனியிலும் குடியானவர்கள் உபயோகித்து வந்தார்கள்.

சீனாவில் 'தீக்-கடிகார'ங்களை உபயோகித்து வந்தார்கள். ஒரு கம்பியின்மேல் மரத் தூளையும், பிட்ச் என்ற ஒரு வகைக் கறுப்புப் பிசினையும் கலந்து பூசியிருப்பார்கள். இதை ஒரு பாத்திரத்தின் மேல் படுத்தாற்போல் வைத்திருப்பார்கள். கம்பியில் இரண்டு செப்புப் பந்துகளை நூலில் கட்டித் தொங்க விட்டிருப்பார்கள். ஒரு பக்கம் தீப்பற்ற வைத்தால் மெதுவாக அது பரவி நூலில் பிடித்துக்கொள்ளும். நூல் பொசுங்கியதும், ஒவ்வொன்றாக அந்தப் பந்துகள் ஒரு தாம்பாளத்தில் விழும்.

ஜப்பானில், உள்ளுக்குள்ளேயே கனிந்து தொடர்ந்து எரியும் ஒருவகைத் திரியை உபயோகித்து வந்தார்கள். அதில் இடைவெளி விட்டுவிட்டு ஒரு முடிச்சுப் போட்டிருக்கும். தீ கனிந்த ஒவ்வொரு முடிச்சருகிலும் வரும்போது மணி இத்தனை என்று கண்டுகொள்ளலாம். ஸ்விட்ஜர்லாந்தில் மலை ஏற வழி காட்டுபவர்கள் மெழுகு வர்த்தி விளக்கை அலாரம் அடித்து எழுப்பும் கடிகாரத்தைப்போல் பயன்படுத்தி வந்தார்கள். வர்த்தியில் குறிப்பிட்ட ஓர் இடத்தில் ஊசி குத்தி அதோடு கனமான பொருள் ஒன்றைக் கட்டித் தொங்கவிட்டிருப்பார்கள். தூங்குகிறவரின் அருகே இந்த மெழுகுவர்த்தி எரிந்துகொண்டிருக்கும். வர்த்தி கரைந்துகொண்டே ஊசியண்டை வரும்போது ஊசியோடு அந்தக் கனமான பொருள் தூங்குகிறவரின் மேல் தொப்பென்று விழும்; உடனே தூக்கிவாரிப்போட, அவர் எழுந்து விடுவார். பழைய கடிகாரங்களுக்குள் மிகவும் பிரதானமானது 'க்ளெப்ஸிட்ரா' என்ற நீர்க் கடிகாரந்தான். இதைச் சீனாவில் 6000 ஆண்டுகளுக்கு முன்பே உபயோகித்து

வந்திருக்கிறார்களாம். இந்தியாவில் கி. மு. 300—இல் இது இருந்தது; இதை 'ஜல யந்திரம்' என்பார்கள். அந்தக் காலத்தில் அமெனெம்ஹெட் என்ற வான சாஸ்திரி இந்த மாதிரி நீர்க் கடிகாரத்தை முதல் முதலாகக் கி.மு. 1550-இல் செய்து முடித்தார். எகிப்தில் கி. மு. 4-ஆம் நூற்றாண்டிலும், ரோமா புரியில் கி. மு. 159-இலும் இதை முதல் முதலாக உபயோகிக்கலானார்கள். கிரேக்க நாட்டில் இது எப்போது புழக்கத்துக்கு வந்தது என்று தெரியவில்லை. ஆனாலும், கி. மு. 5—ஆம் நூற்றாண்டில் அரிஸ்டோஃபெனிஸ் என்ற கிரேக்க அறிஞருக்கும், கி. மு. 4-ஆம் நூற்றாண்டில் ஞானியும் மகா அலெக்சாண்டரின் குருவுமான அரிஸ்டாட்டிலுக்கும் இதைப்பற்றித் தெரிந்திருந்தது. இரவில் நேரம் என்னவென்று அறிந்துகொள்ளத் தாமே ஒரு நீர்க் கடிகாரத்தைத் தயாரித்தார் தத்துவஞானி பிளேட்டோ.

பர்ஷியாவிலும் இப்படி நீர்க் கடிகாரம் தயாரித்து வந்தார்கள். கி. பி. 807—இல் சார்லிமான் என்ற ஐரோப்பியச் சக்கரவர்த்திக்குப் பர்ஷிய மன்னன் பிரமாதமான வேலைப்பாடு அமைந்த இந்த மாதிரி கடிகாரம் ஒன்றை அளித்தான். வெண்கலத்தில் செய்த இந்தக் கடிகாரத்தில் தங்கம் இழைத்திருந்தது. கடிகார டயலில் 12 கதவுகள் அமைந்திருந்தன. அவை ஒவ்வொன்றும் மணி நேரத்தைக் குறித்தன. மணியில் குறிப்பிட்ட கதவோ குறித்த கதவுகளோ திறக்கும். அப்போது அதிலிருந்து, விட்டு விட்டுச் சின்னஞ் சிறு பந்துகள் சில கீழே உள்ள பித்தளை டமாரத்தின் மேல் வந்து விழும். கண்ணால் பார்த்த மாத்திரத்தில் எத்தனை கதவுகள் திறக்கின்றனவோ அத்தனை மணி என்றும், எத்தனை பந்துகள் டமாரத்தின் மேல் உருண்டு விழுகின்றனவோ அத்தனை தடவை விட்டு விட்டு ஒலி கேட்பதால் அத்தனை மணி என்றும் அறிந்துகொள்ளலாம்; 12 மணி இருக்கும்போது 12 குதிரை வீரர்களின் சின்னஞ்சிறு உருவம் இந்தக் கதவைத் திறந்துகொண்டு நிற்பது போல் காட்சி அளிக்கும்.

'அவர்-கிளாஸ்' என்ற மணிக் கண்ணாடி மொத்தத்தில் நீர்க் கடிகாரம் போன்றதே. நீருக்குப் பதிலாக இந்த மணிக் கண்ணாடியில் மணல் நிரப்பி யிருக்கும்; இந்த ஒரு வித்தியாசந்தான். இந்த 'மணிக் கண்ணாடியை'க் கண்டு பிடித்தவர். கி. பி. 8 ஆம் நூற்றாண்டில் சார்ட்டர்ஸ் என்ற ஊரில் வாழ்ந்த லூயிட் ப்ராண்ட் என்ற சந்நியாசி. இதில் அபிவிருத்தி ஏற்பட ஏற்பட மணல் விஷயத்திலும் அதிக அக்கறை செலுத்த வேண்டியதாயிற்று. கறுப்புச் சலவைக் கல் பொடியை ஒன்பது தடவை சாராயத்தில் கொதிக்க வைத்து அதிலுள்ள கசண்டுகளையெல்லாம் ஒவ்வொரு தடவையும் எடுத்துப் போடுவது வழக்கம். கடைசியில் இப்படிக் கிடைத்த நுண்ணிய மணல்

பொடியை வெளியில் உலர்த்து வார்கள்.

இன்னுங்கூடச் சில சர்ச்சுகளில் இந்த மாதிரி கண்ணாடிகளை உபயோகிக்கிறார்கள். பாதிரிமார் உபந்நியாசம் செய்யும்போது குறித்த நேரத்துக்குள் அதை முடிக்க வேண்டி இது பயன்படுகிறது. பிரிட்டிஷ் பார்லிமெண்ட் கட்டிடத்தில் காமன்ஸ் சபை மேஜையிலும் இதே மாதிரி ஒரு கண்ணாடி உண்டு. அவர்னி நாட்டவரான ஜெர்பெர்ட், இரண்டாம் ஸில்வெஸ்டர் என்ற பெயரோடு போப்பாண்டவர் பதவி ஏற்றார். அப்போது இப்படியும் அப்படியும் ஆடி நேரங் காட்டும் 'பெண்டுலம்' ஒன்றை உபயோகப்படுத்தி வந்தார். ஒவ்வொரு தரம் இப்படி ஆடும்போதும் கொக்கியால் அதோடு பொருந்த வைத்திருக்கும் கனம் கண நேரம் கொக்கியிலிருந்து மீளும். அப்போது ஏற்படும். 'க்ளிக்' என்ற சத்தம் அந்தக் கண நேரத்தைக் குறிக்கும். இந்தக் கனத்துக்கு 'எஸ்கேப்மெண்ட்' என்று பெயர்.

ஒரு கடிகாரத்துக்கு மிகவும் அவசியமானவை. 'பெண்டுல'மும் 'எஸ்கேப்மெண்ட்' என்ற கனமுந்தான். கடிகாரத்திலுள்ள யந்திரச் சக்கரத்தையும் டயலிலுள்ள மணி, நிமிஷ முட்களையும் நேரத்தைக்கணக்கிட்டுத் தெரிவிக்கவே பொருத்தினார்கள்: கடிகாரத்தில் மணி அடிக்கும்போது திறந்த கதவு வழியாகக் குயில்கள் எகிறிக் குதிப்பது போலவும், இன்னும் பல வேடிக்கைக் காட்சிகளும் புதுமையை உத்தேசித்து அமைக்கப் பெற்றன.

ஒன்றுக்கு ஒன்று முரணாக இருக்கும் மதக் கோட்பாடுகளை உடையவர்கள்கூட இப்படி நேரத்தைக் கணக்கிடும் விஷயத்தில்மட்டும் ஒரே மாதிரி அக்கறை கொண்டு உழைத்திருக்கிறார்கள். கி. பி. 13-ஆம் நூற்றாண்டில் முஸ்லிம்களுக்கும் கிறிஸ்துவர்களுக்கும் இடையே மும்முரமாகப் போர் நடந்து வந்தது: அப்போது கூட (கி. பி. 1232) எம் மதத்தினரும் பரஸ்பரம் சகோதர பாவத்தை அறிவிப்பதுபோல் எகிப்து சுல்தானை ஸலாதீன், ஜெர்மன் சக்கரவர்த்தி இரண்டாம் ஃப்ரெடரிக்குக்கு, பிரமாதமான வேலைப்பாடுள்ள ஒரு சிறு கடிகாரத்தை அனுப்பி வைத்தார் என்றால் பாருங்கள். கோள வடிவாய் அமைந்த அந்தக் கடிகாரத்தில் சூரியன், சந்திரன், கிரகங்கள், ராசிகளைக் காட்டும் உருவங்கள் எல்லாம் சக்கரத்தாலும் உள்ளே பொருந்திய கனத்தைக் கொண்டும் இயங்கி வந்தன.

கி பி. 1340-இல் பீட்டர் லைட்ஃபுட் என்ற சந்நியாசி இரட்டைப் 'பெண்டுலம்' அமைத்த ஒரு கடிகாரம் தயாரித்தார்; இந்தப் 'பெண்டுலம்' உள்ளே இருக்கும் மணியைக் குறித்த நேரத்தில் அடிக்கும்படி ஆட்டி வைத்தது. சமையலறைகளில் மணல் நிரப்பிய 'மணிக் கண்ணாடி' அந்தக் காலத்துப் பெண்கள் இவ்வளவு நேரத்துக்குள் முட்டையை வேக வைக்க வேண்

டும் என்பதைத் தெரிந்துகொள்ள மிகவும் பயன்பட்டது. பழங் காலத்தில் கல்லறையில் சவப் பெட்டிகளை வைக்கும்போது வாழ்வு முடிந்துவிட்டது என்ப தற்கு அறிகுறியாகக் கூடவே இந்த மாதிரி மணிக் கண்ணாடி களையும் வைத்துவிடுவார்கள்.

இந்தக் காலத்துக் கடிகாரம் சூரிய வெளிச்சத்தால் விழும் நிழலைக் கொண்டோ, நீர், மணல், தீ இவைகளின் உதவி கொண்டோ இயங்காமல் தானு கவே சர்வ சுதந்தரமாக இயங்கு கிறது. எங்கே வேண்டுமானாலும் இதை வைக்கலாம்; எடுத்துப் போகலாம். அப்புறம் ஏற்பட்டது தான் கைக்கடிகாரம். மணிக்கட் டில் அணிந்துகொள்வதற்கு ஏற்ற படி அமைந்திருக்கும்.

இருந்தாலும் வான மண்டலம் காட்டுவது போல் இது நேரங் காட்டாது. மெதுவாகவோ வேக மாகவோ, தான் போகும் போக் கில் தான் மணி காட்டும் கி. மு. 3-ஆம் நூற்றுண்டில் ஆர்க்கிமி டீஸ் 'க்ளெப்ஸிட்ரா' என்ற மணிக் கண்ணுடி'யை மாற்றி அமைத்தார். டயலிலுள்ள விரலை இயங்க வைக்கப் பிஸ்டன் அமைப்புஒன்றுஉண்டு. அதுவரை நீரின் கனத்தால் இந்தப் பிஸ்டன் இயங்கி வந்தது. ஆர்க்கிமிடீஸ் நீருக்குப் பதிலாகக் கணத்தால் இந்தப் பிஸ்டனை இயங்க வைத் தார். இந்தக் கடிகாரத்தின் ஒரு பகுதி வெல் கதிட்ரல் என்ற கிறிஸ்துவ ஆலயத்தில் இன்னும் பத்திரமாக இருப்பதைக் காண லாம்.

கி. பி. 14-ஆம் நூற்றுண்டில் அமைத்த கடிகாரங்கள் எல்லாம் பிரமாதமானவை. மனிதனு டைய மனந்தான் எவ்வளவு அற் புதமானது! ஒவ்வொரு நூற் றுண்டுக்கும் வேற்றுமை தெரி வது இதனால்தான். இந்தக் காலத் தில் பொழுதுபோக்க ரேடியோ, டெலிவிஷன், சினிமாஸ்கோப் ஆகியவையும் சூபர்-கான்ஸ்டெல் லேஷன், காமெட் போன்ற ஆகாய விமானங்களும் இருக் கின்றன. ஆனால் அந்தக் காலத் தில் இந்த மாதிரி சாதனங்கள் மிகவும் குறைவு. இவைகளுக் குள் கடிகாரந்தான் மக்களுக்கு எல்லாவற்றைக் காட்டிலும் மிக வும் பிடித்திருந்தது. இத்தாலி, ஜெர்மனி, இங்கிலாந்து இந்த நாடு களில்போட்டிபோட்டுக்கொண்டு தம் யுக்தி, விசித்திர வேலைப் பாட்டில் தனித் திறமை எல்லா வற்றையும் காட்டி, மக்கள் கடி காரம் தயாரித்து வந்தார்கள். இவைகளில் மிகவும் பிரபல மானது ஸ்ட்ராஸ்பர்க் கதீட்ரல் என்ற கிறிஸ்தவ ஆலயத்தி லுள்ள பெரிய கடிகாரந்தான். கி. பி. 1352-இல் இதை முதல் முதலாக அமைத்தார்கள். 16, 19-ஆம் நூற்றுண்டுகளில் மறு படியும் சீர்திருத்தி வைத்தார் கள்.

'என்ஸைக்ளோபீடியா அமெ ரிக்கானு' என்ற நூலில் இதைப் பற்றிக் கீழ்க்கண்டபடி விவரித் திருப்பதைக் காணலாம்: "தரை மட்டத்தில் பிரபஞ்சத்தைக் குறிக்கும் ஒரு கோளம் இருக் கிறது. இதில் நட்சத்திரங்களைக்

கொண்டு நேரங் கணக்கிடும் அமைப்பு உண்டு. ஸ்ட்ராஸ்பர்க் நகரிலிருந்து பார்த்தால் சாதாரணமாகக் கண்ணுக்குத் தெரியும் நட்சத்திரங்களின் உதயம், சஞ்சாரம், அஸ்தமனம் இவைகளை அதிலிருந்து கண்டுகொள்ளலாம். இதோடு மாதங்கள், தேதிகள், ஞாயிற்றுக் கிழமைகள், விழா நாட்கள் இவைகளைக் காட்டும் காலண்டரும் அமைந்திருக்கிறது. காலண்டருக்கு மேலே அந்த அந்தக் கிழமைகளைக் குறிக்கப் புராண ரீதியான உருவங்கள் உண்டு. இவை இடமிருந்து வலமாக நகரும். இதற்கு மேலே சாதாரணமான நேரத்தைக் குறிக்கும் டயல், கிரக அமைப்பு திதிகளைக் காட்டும் கோளம் இவை இருக்கின்றன. அடுத்த படியாக மனிதனுடைய பருவங்கள் நான்கையும் காட்டும் உருவங்களைக் காணலாம். இவை கால் மணி நேரத்துக்கு ஒரு தரம் அசைந்து மணி அடிக்கும். ஆரம்பத்தில் டயலை அடுத்து அமர்ந்திருக்கும் ஒரு காவல் தெய்வம் கால் மணி நேரத்துக்கு ஒரு தரம் செங்கோலினால் முதல் மணி அடிக்க, முன் சொன்ன மனித உருவங்கள் அதை அடுத்து இரண்டாந் தரம் மணி அடிப்பதும், எதிர்ப் பக்கம் இருக்கும் இன்னொரு காவல் தெய்வம் ஒரு மணி நேரத்துக்கு ஒரு தரம் 'மணிக் கண்ணாடி'யைத் திருப்பி வைப்பதும், அப்போது மரண தேவன் ஓர் எலும்புத் துண்டினால் மணி அடிப்பதும் இதிலுள்ள விசேஷம். அதற்கும் மேலே ஆதி மகான்களான 12 கிறிஸ்துவ அப்போஸ்தலர்களின் உருவங்கள் நடுப் பகல் சரியாக 12 மணிக்கு அங்கே இருக்கும் கிறிஸ்துவின் உருவத்தின் முன் வந்து மண்டியிட்டு வணங்குகின்றன. அப்போது கிறிஸ்து உருவம் சிலுவைக் குறியிட்டு நிற்கிறது. இப்படி இந்த உருவங்கள் செல்லும்போது இடது புறம் இருக்கும் ஒரு கோபுரத்தில் உட்கார்ந்திருக்கும் கோழி கழுத்தை அலைப்பிச் சிறகை விரித்து அடித்துக்கொண்டு மூன்று தரம் கூவுகிறது.

இந்தக் காலத்துக் கடிகாரத்துக்கும் அந்தக் கடிகாரத்துக்குந்தான் எவ்வளவு வித்தியாசம்! இப்போது சாவி கொடுக்காமலே மின்சார விசையால் ஓடும் கடிகாரங்களைக் காணலாம். இப்போது புராண ரீதியில் அமைந்த கடிகாரங்களே துர்லபம். லட்சக் கணக்கான தொழிலாளிகள் இப்போது இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இப்படியெல்லாம் கடிகாரத்திலுள்ள முட்கள் ஒரே வட்டத்துக்குள் சுற்றி வந்துகொண்டிருந்தாலும் காலம் மட்டும் அதன் போக்கில் போய்க்கொண்டுதான் இருக்கிறது!

# இராமலிங்க அடிகளின் தத்துவம்

## சன்மார்க்கத் தத்துவம்

ஏ. நடேச முதலியார்

பற்பல காலங்களில் நற்றவத்தவர் வாழ்ந்து மக்கள் சமுதாயத்துக்கு வழிகாட்டிய, நல்லநாடு நம் தமிழ் நாடு. சமய உண்மைகளை யறிவதற்கும் அதன் வழி நின்று பயனடைவதற்கும், நம்மோடு உடனுறைந்து வழிகாட்டிய உயர்ந்த அருளாளர்களுடைய சொலலும் செயலுமே நமக்குத் துணை செய்வன. 19-ம் நூற்றாண்டில், வாழ்ந்து வழி காட்டிய நம் வடலூர் வள்ளலார் நமக்குக் கொடுத்த அருட்செல்வம், அருட்பாவும், சமரச சுத்த சன்மார்க்க சங்கமும் ஆகும். வள்ளலாருடைய வாழ்வு இரண்டு பிரிவினை உடையது. குடும்ப வாழ்வு, துறவு வாழ்வு என. குடும்ப வாழ்வில் பற்றின்றி, தாமரை இலையில் தண்ணீர் போல, உறவோடு உடனுறைந்தாலும், பிரிந்து, பேச்சும், செயலும், தவக்குறை முடிப்பதிலேயே சென்றது. துறவு நிலை பூண்ட தூய வாழ்வு, மனித சமுதாயத்துக்குத் தன்னிகரில்லாத தனிப்பெருந் துணையாகிய நன்னெறி வகுத்துக் கொடுத்தது. அந்நன்னெறியே சன்மார்க்க சங்கம் என்பது.

சன்மார்க்க சங்கம் நிறுவிய இராமலிங்க அடிகளின் இலக்கியச் சுவை, பண்டைய இலக்கியங்களின் ஆழ அகலமும் பொருந்தி புது இலக்கியங்களின் வழிகாட்டியாகவும் அமைந்து, தன் சன்மார்க்க சங்கக் கொள்கையை அரண் செய்வனவாய் அமைந்துள்ளமையை அறியலாம்.

உலகப்போக்கில் நிகழும் சாதி, சமய, நிறமொழி வேற்றுமைகளைக் களைந்து, உயிர் விளக்கத்தால் அனைத்துயிரும் ஒன்றே என்ற உண்மை நிலையை உபதேசிக்கும் ஒரு பெருஞ் சமரசத்தை அடிகளுடைய திருவாக்கில் காண்கிறோம்

உயிர்களிடம் காட்டும் அன்பும், இரக்கமும், உயிர்க்கொலை புலைப் புசிப்பு தவிர்ந்த ஒழுக்கத்தினலும், உணவளித்தல், துன்பத் துடைப்பு என்ற இரக்கச் செயலாலும், வெளிப்படுவதே சீவகாருண்யம் என்பதை அடிகள் தெளிவு செய்துள்ளார்கள்.

தாவரம் முதலாகவும், எறும்பு முதல் யானை யீறாகவும், மக்களும் அனைத்தும் இறையருள் விளக்கம் பெறும் கோயிலாகக் காணும் நிலை பெற்றவனுக்கு ஆன்மாக்களுள் உயர்வு தாழ்வு காணப்படுவதில்லை. எல்லாம் அருட்பெருஞ் சோதியாண்டவன் விளங்கும் கோயில்களாகவே காண்கி

றான். அங்கே பேதமற்ற, அன்பு எழுகிறது. அந்நேயத்தில் ஒருமையுணர்வும், உரிமைப் பேறும் பெறுகிறான். அந்நிலையே மனிதன் பெறும் பெரும் பேறு கிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை என்று அடிகள் முடிந்த முடிவாகக் காட்டுகிறார் கள். இந்த நிலை படிப்படியாக வளர்வதே சன்மார்க்க சங்கக் குறிக்கோளாகும்.

சன்மார்க்க சங்கம் என்பதனை நடுநிறுத்தி, முன்னும் பின்னும் அறிய வேண்டிய, அடைய வேண் டிய இரண்டு நிலைகள் உண்டு.

முதலாவது, சீவகாருண்யம் என்னும் உயிர்க்கிரங்கும் பண்பு. உயிர்கள் உடலோடு கூடி வாழ் கின்றன. உடல் மூன்று குறை களையுடையது. பசி, பிணி, இறப்பு என்ற மூன்றும் உடை யது. உடல், உடலெடுத்த அனைத்துயிர்க்கும் இம்மூன்றும் உண்டு. உணவினால் பசியும், மருந்தினால் பிணியும், சாகாக்கலை யினால் இறப்பும் நீங்கத் துணை செய்வதே சீவகாருண்யம் என்ப தாகும்.

முதலில் எல்லா உயிர்கட்கும், உணவினால் பசியையும், மருந்தி னால் நோயையும் நீக்க முயற்சிப் பதே, மனிதன் சீவகாருண்யத் தில் அடி வைப்பதாகும். பசிக்கு உணவும், நோய்க்கு மருந்தும் கொடுத்து உயிர்க்கிரங்கும் பண் பாளன், பிறவுயிர்க்குத் துன்பம் செய்யவோ, பிற உயிர் நின்ற உடலைத் தின்னவோ ஒருப் படான். ஆகையால், உயிர்க் கொலையும் புலைப்புசிப்பும் உடை யார் சீவகாருண்யம் என்னும் உணவளித்தலும் நோய்க்கு மருந்து கொடுத்து நோய் நீக்க லும் செய்யார், இரக்கம் இன்மை யின்; நம் இராமலிங்க வள்ள லார் காட்டும் சன்மார்க்கம் என்றும் தனி நெறி. அடிகளே கண்டதும் காட்டியதும் அன்று. அவர்கட்கு முன்னே ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக சித்தர் களும், யோகிகளும் கண்டு காட் டிய உண்மை நெறியே ஆகும். அதனை வகுத்து, வழிப்படுத்தி யும், வாழ்ந்து காட்டியும், நமக் கும் விரித்துரைத்தும், கடைப் பிடிக்க வற்புறுத்தியருளியதுமே அடிகள் செய்த அரும் பெரும் செயலாகும்.

"உண்மை உரைக்கின்றேன்
இங்கு
வந்தடைமின் உலகீர்
உரையிதனிற் சந்தேகித்து
உளறி வழியாதீர்
எண்மையினான் என நினையீர்
எல்லாஞ்செய் வல்லான்
என்னுள் அமர்ந்திசைக்கின்
றான்
இது கேண்மின் நீவிர்
தண்மையொடு சுத்த
சிவசன்மார்க்க நெறியில்
சார்ந்து விரைந்தேறுமினோ
சத்திய வாழ்வு—அளிக்
கக்

கண்மை தரும் ஒரு பெருஞ்
சீர்க்கடவுளெனப் புகலும்
கருணை நிதி வருகின்ற
தருணமிது தானே"

என்று அடிகள் கூறுவதால் அறி யலாம். மேலும், "அன்புடை

யீர் வம்மினிங்கே சமரச சன்மார்க்கம் அடைந்திடுமின்” என்றும்,

“இடைந்து ஒரு சார் அலையாதீர்
சுகம் எனைப் போல் பெறுவீர்
யான் வேறுநீர் வேறு
என்றெண்ணுகிலேன்
உரைத்தேன்
உடைந்த சமயக் குழிநின்
றெழுந்துணர்மின் அழியா
ஒரு நெறியாம் சன்மார்க்கத்
திருநெறி பெற்றுவந்தே”

என்றும் கூறுவதால் அறியலாம்.

அச்சன்மார்க்க நெறிதான் யாது என்பது மேல் அறியலாம். அடிகள் சத்தாகிய உண்மையை அறியச் செல்லும் ஒரு பெரு நெறியே சன்மார்க்கம் என்பது என்று கூறி அதனை அடைந்தின்புறும் வழியினை வகுத்துச் சென்றுள்ளார்கள். அதற்கு அடிகள், தம் அடியார்க்கு உபதேசித்த உண்மை நெறியில் (உண்மை நெறி—சன்மார்க்கம்) நான்கு படிகள் கூறுகிறார்கள்.

1. ஏமசித்தி
2. சாகாக்கலை
3. தத்துவ நிக்கிரகம்
4. கடவுள் நிலையறிந்து அம்மயமாதல் என்பன.

இப்படிகளை அடைய, கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க முறைகள் நான்கு உபதேசிக்கிறார்கள். அவையாவன :

1. இந்திரிய ஒழுக்கம்
2. கரண ஒழுக்கம்
3. சிவ ஒழுக்கம்
4. ஆன்ம ஒழுக்கம் என்பன.

இந்தப்படி நிலைகள் விரிந்து செல்வன. இவற்றுள் இந்திரிய ஒழுக்கம் 21 பிரிவினை உடையது. அதனுள் ஒன்று. எல்லா உயிர்கட்கும் இன்பம் எண்ணுதல், இனியவை பேசல், பசி, பிணிகட்கு இரங்கி, உணவும் மருந்தும் கொடுத்தளித்துப் போற்றல் இது சன்மார்க்க சங்கத்தில் உறுப்பினராவதற்கு முற்படியாகும். இப்படி, 21 படிகள் தாண்டினால், கரண ஒழுக்கம் அமையும். அதில் 12-படி தாண்டினால் சீவ ஒழுக்கம் நிலைக்கும். அதில் 6-படி தாண்டினால் ஆன்ம ஒழுக்கம் அமையும். அதுபோது அவன் சன்மார்க்க சங்க உறுப்பினன் ஆகிறான். அவனை ஒப்பார் பலர் கூடின கூட்டமே சன்மார்க்க சங்கம்.

“தங்கமே யனையார் கூடிய சுத்த சமரச சன்மார்க்க, சங்கமே கூடிக் களிக்கும்” நிலை அப்போது வருகிறது. அதனால் தான் அடிகள் சன்மார்க்க சங்க அமைப்பினை மூன்றாகப் பிரித்து அமைத்தார்கள். சாலை, சங்கம், சபை என்பன அவை. தருமசாலையில், பசிப் பிணிக்கு உணவு அளித்தலும் நோய்க்கு மருந்தளித்தலும், அவர்களுடைய கடன். இராமலிங்க அடிகள், சித்தமுறையில் உடற்பிணிக்கு மருந்து உதவிய நல்ல மருத்துவர். உடல் வாழ்வு நோயின்றி அமைய வேண்டும் அல்லவா? ஆகையால் உணவில் தூய்மை, ஒழுக்கத்தில் தூய்மை, சொல்லில் உண்மை, இனிமை, செயலில் உதவிச்செயல் இவை

அமைந்தால்தான் நோயின்றி வாழ முடியும். இந்நிலைக்கு, உதவி செய்வது, சன்மார்க்க தருமசாலையின் நோக்கம். அத் தருமசாலையில் பயின்ற அன்பர்கள், ஆன்மநேய ஒருமைப் பாட்டிற்கு, உடன் வருகிறார்கள். அவர்கள் கூடி, ஆன்ம விசாரம் செய்வது, சன்மார்க்க சங்கம், அவர்களில் சாதி, சமய, மத வேறுபாடான ஆசார சங்கற்ப விகற்பங்கள் கிடையாது. சன்மார்க்க சங்கத் தலைவன் அருட்பெரும்சோதி ஆண்டவரே. அவரே தனித் தலைமை நாயகர். அவரன்றி வேறெவரும் சன்மார்க்க சங்கத் தலைவராகார். அங்ஙனம், சன்மார்க்க சங்கத்தில் ஆன்ம விசாரம் செய்து, பரிபாகம் அடைந்தபோது ஆன்ம நாயகரான, அருட்பெருஞ்சோதி ஆண்டவரைக் கலந்து மகிழும் அநுபவ நன்னாள் வரும். வருகிறது. அங்கு அத் தலைவனோடு ஒன்றி மகிழும் இடமே சத்திய ஞான சபை. உண்மைப் பொருளை அறிந்து அனுபவ நிலையில் கூடும் இடம். உண்மைப் பொருளானது ஒளியாய், பேரொளியாய் தன் பேரருளாலே, ஆன்ம அநுபவமாய் வெளிப்படுகிறது. அந்த அனுபவம் வேறு யார்க்கும் அடைய முடியாதது, இப்படிப் பட்டது என்றும் சொல்ல முடியாதது. அதனை சன்மார்க்க சங்கத்து இருந்து, அநுபவிக்க வேண்டும். சத்திய ஞான சபையில் அருட்பெருஞ்சோதி ஆண்டவரிடம் சன்மார்க்க சங்கத் தனித் தலைமை நாயகனிடம், ஆன்ம ஒழுக்கம் நிறைவேறப்பெற்ற சன்மார்க்க சங்க உறுப்பினர்தான் அனுபவிக்க முடியும். அடிகள் அந்த அனுபவ நிலையை அனுபவ நிலையில் நமக்கு வெளிப்படையாகக் காட்ட அமைத்த முறை தான் சன்மார்க்க தருமசாலை, சன்மார்க்க சங்கம், சத்திய ஞான சபை என்பன. இந்த நிலையை தான் பெற்றபேறு இவ்வுலகமும் பெற்று உய்யவேண்டும் என்று காட்டினார்கள். பாடினார்கள். காட்டு, வடலூர் சத்திய ஞான சபையாகவும், சன்மார்க்க சங்கமாகவும், தருமச்சாலையாகவும் விளங்கிக்கொண்டிருக்கின்றன. பாடினவை, அருட்பாவாக எங்கும் முழங்கிக்கொண்டிருக்கின்றன. கண்ணுள்ள அன்பர்கள் வடலூர் சென்று, சாலையில் கூடி, சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்து, சத்திய ஞான சபையில் அருட்பெருஞ்சோதி ஆண்டவரோடு ஒன்றி, தன்னிகரில்லாத் தனிப் பேரின்பம் அடையலாம். கருத்துள்ளவர்கள், அருட்பாவைக் கருத்துள் அமைத்து, நினைந்து, நினைந்து, கசிந்து கசிந்து, அன்பே கனிந்து கனிந்து, ஊற்றெழுங் கண்ணீரதனால் நனைந்து நனைந்து, தனித் தலைமை நாயகனோடு கூடிக் கலந்து, மரணமிலாப் பெருவாழ்வு பெற்று இன்புறலாம்

பொய்யல்ல. இது சத்தியம்.
இது சத்தியம்.
நினைந்து நினைந்து உணர்ந்து
உணர்ந்து நெகிழ்ந்து
நெகிழ்ந்து அன்பே
நிறைந்து நிறைந்து
ஊற்றெழுங் கண்ணீர தனால்
உடம்பு
நனைந்து நனைந்து அருளமுதே
நன்னிதியே ஞான
நடத்தரசே என்னுரிமை
நாயகனே என்று
வனைந்து வனைந்து ஏத்துதும்
நாம் வம்மினுலகீர்
மணமிலாப் பெருவாழ்வு
வாழ்ந்திடலாம் கணடீர்
புனைந்துரையேன் பொய்புகலேன்
சத்தியம் சொல்கின்றேன்
பொற்சபையில் சிற்சபை
யில்
புகுந்தருணம் இதுவே.
அருட் பெருஞ்சோதி!
தனிப் பெருங் கருணை!

---


# புதுமுறை சங்க வாய்பாடு

**V.K. சேஷாத்திரி. B.A., L.T.**

(Retired Deputy Inspector of schools.)

புதிய மெட்ரிக், நயாபைசா திட்டப்படி எளிய முறையில் மாணவர்களுக்குச் சுலபமாகப் புரியும் வகையில் புது முறை சங்க வாய்பாடு இயற்றப் பெற்றிருக்கிறது.

தனிப் பிரதியின் விலை ரூ. 0-13 ந. பை. 100 வாய்பாடு மொத்தமாக வாங்குபவர்களுக்கு 100 பிரதிகள் ரூ. 9 வீதம் கொடுக்கப்படும். அதற்குக் குறைந்து, புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுப்பவர்களுக்கு 25% கழிவு கொடுக்கப்படும்.

**அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்**

# ஆதாரக் கல்வியின்

## அடிப்படைத் தத்துவம்

நீண்டகாலத்துக்கு முன்சீனாவை ஒரு மன்னன் ஆண்டு வந்தான். அவனுக்கு ஒரே ஒரு மகன். ஒருநாள் அவன் ஓர் இடைப் பெண்ணைக் கண்டான். அவள் நல்ல அழகி. இளவரசன் அவள் மீது காதல்கொண்டான். உடனே தந்தையிடம் சென்று நடந்ததைக் கூறினான், "அவளை எனக்கு மணம் செய்து வைக்க வேண்டும்" என்றான். அரசன் திடுக்கிட்டான், "மகனே! ஓர் இடைப் பெண்ணையா நீ மணப்பது? இவளை விட அழகிகள் இவ்வுலகில் இருப்பார்கள். அரசகுலத்தில் பிறந்த பேரழகி ஒருத்தியை உனக்கு நான் மணம் செய்து வைக்கிறேன்" என்றான். இளவரசன் அதற்கிணங்கவில்லை. "நான் மணம்செய்து கொள்வதாயிருந்தால், அந்தப் பெண்ணைத் தான் மணப்பேன்" என்று ஒற்றைக்காலில் நின்றான். அவனுக்கு உணவு செல்லவில்லை. உறக்கம் கொள்ளவில்லை. பார்த்தான் அரசன். என்ன செய்வான்? ஒரே மகன். ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான், பின்பு மகனுடைய விருப்பத்துக்கு இசைந்தான். பெண் கேட்கப்போனான். என்ன அதிசயம் இடைப் பெண் திருமணத்துக்கு இசையவில்லை. "அதெல்லாம் இருக்கட்டும் உங்கள் இளவரசருக்கு என்ன தொழில் தெரியும்?" என்று அவள் ஒரு கேள்வி கேட்டாள். அரசன் திகைத்தான். "என்னை மணம் செய்து கொள்வதாயிருந்தால் அவர் ஒரு கைத்தொழில் தெரிந்தவராயிருக்க வேண்டும்" என்று கண்டிப்பாய்க் கூறி விட்டாள், அவள். அரசன் கவலையுடன் அரண்மனைக்குத் திரும்பி வந்தான். புதல்வனிடம் இதைக் கூறினான். இளவரசன் தந்தையைத் தேற்றினான், "அதற்கென்ன அப்பா! நான் கோரைப்பாய் முடையக் கற்றுக் கொள்கிறேன்" என்றான். இரவு பகலாய் அவன் அதில் ஈடுபட்டான். காதல் வேகம் மிகுந்தது அல்லவா? ஒரு மாதத்தில் அவன் முழு தேர்ச்சியடைந்தான். தானே முடைந்த இரண்டு கோரைப் பாய்களை இடைப் பெண்ணுக்கு அனுப்பியும் வைத்தான். அவள் திருமணத்துக்கு இசைந்தாள். மறுநாளே திருமணம் நடந்தது. இடைப் பெண்ணாகிய லிங்-பூ, இளவரசன் ஷான்மாவின் மனைவியானாள்.

ஐந்தாறு மாதங்கள்
கழிந்தன......

ஒருநாள் இளவரசன் வேட்டைக்குப் போனான். காடு, மலை

எல்லாம் தாண்டி நெடுந்தொலைவுக்கப்பால் சென்றான். அங்கு ஒரு கொள்ளைக் கூட்டம் அவனைத் தடுத்து நிறுத்தி, பாதாளச் சிறையில் வைத்தது.

நாட்கள் பல கழிந்தன. அவர்களிடமிருந்து எப்படித் தப்புவதென்று இளவரசன் சிந்தித்தான். கடைசியில் அவனுக்கு ஒரு வழி புலப்பட்டது. ஒரு நாள் அவன் கள்வர் தலைவனைப் பார்த்து "ஐயா, எனக்குப் பொழுது போகவில்லை. கொஞ்சம் கோரைப்புல் இருந்தால் கொடுங்கள், அழகான பாய்கள் முடையத் தெரியும். அவற்றை அரண்மனையில் கொண்டு போய்க் கொடுத்தால் உங்களுக்கு நிறையப் பணம் கிடைக்கும்" என்றான். கள்வர் தலைவன் மகிழ்ச்சியடைந்தான். உடனே அவனுக்குக் கோரைப்புல் கிடைக்கும்படி ஏற்பாடு செய்தான். நான்கைந்து நாளில், இளவரசன் துணியைப் போல மெல்லிய பூ வேலைப் பாடமைந்த இரண்டு பாய்கள் முடைந்து, கள்வர் தலைவனிடம் கொடுத்தான். அவன் அவற்றை எடுத்துக்கொண்டு அரண்மனைக்குப் போனான். அரசன் அவற்றைப் பார்த்தான். சொல்ல முடியாத வியப்பு உண்டாயிற்று அவனுக்கு — இளவரசன்தான் இருக்குமிடத்தை அதில் நுட்பமாய்ப் பொறித்திருந்தான். அரசன் ஒரு பெரும் படையை அழைத்துக்கொண்டு போனான். கள்வர் கூட்டத்தைக் கொன்று, மகனை விடுவித்தான். இளவரசன் அரண்மனைக்குப் போனதும் முதலில் தன் மனைவிக்கு நன்றி கூறினான். "அன்பே, உன்னால்லவா நான் விடுதலையானேன்; கற்ற வித்தை காலத்துக்கு உதவும் என்பது உண்மையாகி விட்டது" என்றான். லிங்-பூ சிரித்தாள். "ஆயிரம் நூல்கள் படித்திருந்தாலும் கைத்தொழில் ஒன்று கற்றிருக்கவேண்டும். இனிமேலாவது கைத்தொழிலைத் தாழ்வாய்க் கருதமாட்டீர்கள் அல்லவா?" என்றாள், அருகேயிருந்த அரசன், "மாட்டோம் மருமகளே" என்றான்.

## அன்றும்—இன்றும்

கதையை இங்கு நிறுத்திவிட்டு 1966-ம் ஆண்டுக்கு வருவோம். இளவரசன் தந்திரத்தினால் கொள்ளைக்காரர் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு பாதாளச் சிறையிலிருந்து தப்பினான். அவன் சிறையுண்டிருந்தபோது ஒரு வாரம் வரை அரசன் உணவை ஏறெடுத்துக்கூடப் பார்க்கவில்லை. நாடு முழுவதும் துயரத்தில் மூழ்கிக்கிடந்தது. ஓர் இளவரசனுக்காக நாடெல்லாம் அப்படிக் கவலைப்பட்டது. ஆனால் இன்றோ பல்லாயிரக்கணக்கான இளவரசர்கள்—வருங்கால பாரதத்தை உருவாக்கப்போகும் சிற்பிகள்—பள்ளிகள் என்ற சிறைகளில் நாள்தோறும் காலை ஒன்பது மணிமுதல் மாலை ஐந்துமணி வரை அடைபட்டுப் புழுங்கி ஏங்குகிறார்கள். அவர்கள் அந்தச் சிறையில் என்ன செய்கிறார்கள்? ஆடாமல் அசையாமல் நாற்காலிகளில் உட்கார்ந்துகொண்டேயிருக்க வேண்டும். சற்று அப்படி

றம் இப்புறம் திரும்பிப் பார்த்து விட்டாலோ, அண்டையில் இருக்கும் பையனுடன் பேசிவிட்டாலோ ஆசிரியரின் கோபத்துக்குள்ளாக வேண்டும். "ஏறு பெஞ்சுமேல்" என்ற தண்டனை கிடைக்கும். பொதுவாய்க் கூறினால், ஏதேதோ விஷய அறிவு மாணவர்களின் மூளையில் திணிக்கப்படுகிறது. கண்ணுக்கும் மூளைக்கும் செவிக்கும் வேலை. ஆனால் உடம்பு முழுவதும் அப்படியே இருக்கிறது. அந்தோ, அந்த உடம்பு கல்லா, மண்ணா, இரும்பா? உணர்ச்சி நிறைந்த ஓர் உயிர் அல்லவா? துள்ளித் திரிகின்ற ஒரு கன்றைப் போலத் துடிப்பும் குறுகுறுப்பும் நிறைந்தது. கட்டுண்டிருப்பதை எதிர்க்கும் இயல்பு கொண்டது. இவ்வுலகமென்னும் பூங்காவில் ஓடியாடித் திரிவதற்காக இறைவனால் படைக்கப்பட்டது அது. ஆனால், என்ன பரிதாபம், அடைபட்டுக் கிடக்கிறது. நாளடைவில் செயலற்று, ஊனமற்றுப்போகிறது. நாற்காலியில் உட்கார்ந்து குமாஸ்தா வேலை பார்ப்பதற்குத் தான் அவர்கள் தகுதியானவர்களாகிறார்கள்.

இதன் விளைவாக, இன்று மக்களிடையே இரு பிரிவை நாம் காண்கிறோம். ஒரு பகுதியினர் உடம்பை வளைத்து உழைக்கிறார்கள். மற்றொரு பகுதியினர் மூளையைப் பயன்படுத்தி உழைக்கிறார்கள். உடல் உழைப்பு செய்பவர்களுக்குப் படிப்பு இல்லை. மூளையை உபயோகிப்பவர்களுக்கு உடலுழைப்பு இல்லை. இது பெருந் தவறு. ஒரே சமயத்தில் இரண்டுக்கும் வேலை இருக்கவேண்டும். அப்போது தான் ஒருங்கிணைந்த வளர்ச்சியடைய முடியும். இதைப் பற்றி சோவியத் கல்வியமைச்சர் அலெக்சிமர்க்குஷேவிச் என்பவர் கூறுவதைக் கேட்போம். "புகழ் பெற்ற மனிதர்கள் எல்லோரும், உள்ளமும் உடம்பும் ஒருங்கே வளர்ச்சி பெற்றவர்கள். இதை நாம் வரலாற்றிலிருந்து காணலாம். அவர்கள் அதியுன்னத அறிவுக் கூர்மை பெற்றிருப்பதோடு, தத்தம் கைகள் மூலம் பயனுள்ள தொழில் ஒன்று செய்யும் திறனும் பெற்றிருந்தார்கள். பெருங்கவிஞர் கெத்தே வாழ்ந்த இல்லம், வீமர் என்ற ஜெர்மன் நகரில் இருக்கிறது. அங்கு ஓர் அறையில், உட்கார்ந்து எழுத ஒரு மேசை இருக்கிறது. அதனருகே ஒரு கடைசல் பொறியும் நுண்பெருக்கியும் உள்ளன. புகழ்பெற்ற ருஷ்ய எழுத்தாளரான லியோடால்ஸ்டாய் மட்டும் என்ன? எழுதாத நேரத்தில் அவர் வயலில் உழுதுகொண்டோ புல் செதுக்கிக்கொண்டோ தான் இருந்தார். இது வேடிக்கைக்காகக் கூறப்படுவதல்ல, உண்மை".

கெத்தேயையும் டால்டாயையும் போல பலரை நாமும் இங்கு எடுத்துக்காட்டாகக் கூற முடியும். தமிழ் மறையாகிய திருக்குறளை உலகத்துக்கு அளித்த வள்ளுவர் பெருமானும், "பத்திச்சுவை நனி சொட்டச்

சொட்ட" ஹிந்தியில் அருங் கவிகள் புனைந்த கபீர் தாசரும் நெசவையே தொழிலாய்க் கொண்டவர்கள். இன்னும் எத்தனையோ பல அறிஞர்கள் அவ்விதம் இருந்திருக்கிறார்கள். நம் கல்வி முறையே முன்பு அவ்விதம் தான் இருந்திருக்கிறது. வாழ்க்கைக்கு அது ஒரு பயிற்சிக்கூடமாயிருந்தது. உடலுழைப்பை அது ஒரு போதும் தாழ்வாய்க் கருதியதில்லை. உழவர், கொல்லர், தச்சர் முதலியோர் அடங்கிய கிராம சமுதாயக் குழந்தைகள் தங்கள் தாய் தந்தையருக்கு அவர்களுடைய தொழில்களில் உதவி செய்து கொண்டும், ஆசிரியர்களுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து கொண்டும் படித்தனர் படிப்பு முடிந்த பிறகுங்கூடப் பெரும்பாலோர் ஏதாவது ஒரு தொழிலையே செய்து வந்தனர். குமாஸ்தா வேலைக்கு மனுப்போடவில்லை. ஆசிரியர்கள் ஒழுக்கத்தில் சிறந்தவர்களாயிருந்ததால் அவர்களுடைய நல்லியல்புகள் மாணவர்களிடமும் படிந்தன. ஐரோப்பியர்களுடன் நமக்கு வாணிபத் தொடர்பு ஏற்பட்ட பிறகு, இந்த நிலைமை மாறியது. திரு ஜே. சி. குமரப்பா அவர்கள் கூறுவது போல் நம் உயர்ந்த நோக்கங்கள், சிறந்த சிந்தனைகள், அரிய பண்புகள் முதலியன வெல்லாம் மறைந்தன. தங்கத்தையே தெய்வமாய்த் தொழ ஆரம்பித்தோம். பணத்தையே அளவு கோலாக வைத்து எல்லாவற்றையும் மதிக்கத் தொடங்கினோம். பாரத நாகரிகம் மறைந்தது; பனியா (வணிகர்) நாகரிகம் புகுந்தது. வெறும் எழுத்தறிவையே கல்வி என்று நம்பத்தொடங்கினோம். இது எவ்வளவு பெரிய தவறு என்பதை நாம் இன்னமும் உணரவில்லை. ஹைதர் அலியை எல்லோருக்கும் தெரியும். ஆங்கிலேயரை நடுங்க வைத்த மகா வீரன், ஒரு சாதாரண போர் வீரனாயிருந்து மன்னனானவன். ஒருமுறை அவன் ஓர் அதிகாரிக்கு முக்கியமான பதவி ஒன்று அளித்தான். படைத் தலைவர் இதற்கு ஆட்சேபம் கூறினார். "ஹுசூர், அவன் அதிகம் படிக்கவில்லையே" என்றார் அவர். உடனே ஹைதர் ஏளனத்துடன், "படிப்பு! பள்ளிப் படிப்பின் மூலமா நான் இவ்வளவு பெரிய இராஜ்யத்துக்கு மன்னனானேன். "உலகமே படிப்பு" என்றானாம்.

**ஆதாரக்கல்வி என்றால் என்ன?**

நன்றாய்ச் சொன்னான் அந்த வீரன்! ஆம், படிப்பு பள்ளிக்கூட அறைகளிலும் பாடப் புத்தகங்களிலும் மாத்திரம் இல்லை. வாழ்க்கை மூலமும் வெளியுலகத்திலிருந்தும் நாம் கற்க வேண்டியவை தான் அதிகம். "எழுத்தறிவு கல்வியின் குறிக்கோள் அல்ல; கல்வியின் ஆரம்பம் கூட அல்ல, ஆண்களுக்கும் பெண்களுக்கும் கல்வி அளிப்பதற்குரிய பல வழிமுறைகளில் அது ஒன்று; அவ்வளவே" என்கிறார் நம் தேசத் தந்தை காந்தி. இந்திய அரசியல், பொருளாதாரத் துறைகளில்

அருந் தொண்டாற்றிய அம் மகான், நம் நாட்டில் பள்ளிகளில் கல்வி என்னும் பெயரில் சிறுவர் சிறுமியருக்கு இழைக்கப் படும் கொடுமையைக் கண்டார். எழுத்தறிவையே குறிக்கோளாய்க் கொண்ட இந்தக் கல்வி முறையை மாற்றியமைக்க வேண்டியதன் தேவையை உணர்ந்தார். பல ஆண்டுகள் ஆழ்ந்து சிந்தித்தார். கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தார். "சிந்திக்கும் மூளை இருந்தால் மாத்திரம் போதாது; சிந்திக்கும் விரல்களும் இருக்க வேண்டும்" என்றார். இதை அடிப்படை வைத்து பள்ளி என்னும் இருட் சிறைகளிலிருந்து நம் குழந்தைகளை விடுப்பதற்காக அவர் ஒரு கல்வித் திட்டம் வகுத்தார். இதுவே ஆதாரக்கல்வி என்று இப்போது கூறப்படுகிறது. இந்தத் திட்டத்தின் முக்கிய அம்சம் என்ன?

இது குழந்தைகளுக்குக் கோரைப்புல் அளிக்கிறது!

ஆம், இளவரசன் கள்வர் தலைவனிடமிருந்து கோரைப்புல் பெற்றுப் பாய்கள் முடைந்து, சிறையிலிருந்து விடுதலையானன் அல்லவா? அதைப்போல ஏதாவது ஒரு தொழிலை மையமாக வைத்து அதன் மூலம் கல்வி பெற இது வகை செய்கிறது. இதனல் படிப்பு என்பது குழந்தைகளுக்கு ஒரு விளையாட்டைப் போன்றதாகவும் இன்பமானதாகவும் மாறுகிறது. குழந்தைகள் பள்ளிச் சிறைகளிலிருந்து விடுதலையடைகிறார்கள்.

பூதான முனிவர் வினோபா இதற்குச் சரியான உதாரணம் ஒன்று கொடுத்திருக்கிறார். "கண்ணன் ஒரு கையில் கடிவாளத்தைப் பிடித்துக்கொண்டு, மற்றொரு கையை உயர்த்தி அருச்சுனனுக்குக் கீதையை உபதேசிக்கிறான் அல்லவா, அதைப் போன்றதாகும் இது" என்கிறார் இவர். இதன் மூலம் ஒரே சமயத்தில் உடம்புக்கும் உள்ளத்துக்கும் வேலை கிடைக்கிறது.

## வாழ்க்கையுடன் தொடர்பு

இக்காலத்தில் பள்ளிகளில் குழந்தைகளுக்கு அளிக்கப்படும் கல்விக்கும் வாழ்க்கைக்கும் போதிய தொடர்பு இல்லை. ஆனல் காந்தி வகுத்த இந்தக் கல்வித் திட்டம் மாணவனுக்கும் வாழ்க்கைக்கும் தொடர்பை ஏற்படுத்துகிறது. கற்ற கல்வி வாழ்க்கைக்கும் பயனுள்ளதாகிறது. பயிர்த் தொழில் பட்டம்பெற்றவன் தன் வீட்டில் ஒரு ரோஜாச் செடியை வைப்பதற்கு, அடுத்த வீட்டு வேலைக்காரனை அழைத்து வரமாட்டான்!

ஆதாரக்கல்வியில் இன்னும் பல சிறப்பான அம்சங்கள் உள்ளன.

மனிதன் என்றால் யார்? உடம்பு, உள்ளம் ஆன்மா ஆகிய மூன்றும் சேர்ந்து ஓர் உயிருள்ள வடிவத்தையே நாம் மனிதன் என்கிறோம். நல்ல கல்வி முறையெனில், அவனிடமுள்ள இந்த மூன்றும் மலரும்படி செய்து, அவனை முழுமனிதனாக்க வேண்டும்.

அது மட்டுமல்ல:

சமூகத்தில் தனக்குள்ள பொறுப்புகளை அவன் உணரும் படிச் செய்வதாயிருக்கவேண்டும்.

அது மட்டுமல்ல,

வேலையில் உயர்வு தாழ்வு கற்பிக்கக்கூடாது. "ஒரு வக்கீலுக்கும் நாவிதனுக்கும் வாழ்க்கைத் தேவைகள் ஒன்று தான். வேலையில் வேறுபாடு இருக்கலாம். ஆனால் இருவரது வேலையும் உயர்ந்ததே. ஆகவே இருவருக்கும் சரிநிகர் மதிப்பு அளிக்கப்படவேண்டும்" என்ற உயர்ந்த தத்துவத்தைப் புகட்டுவதாயிருக்கவேண்டும்.

எல்லாவற்றையும் விட ஒழுக்கத்தில் போதிய கவனம் செலுத்தவேண்டும்.

சுருங்கக் கூறினால், கல்வி ஒருவனைச் சிறந்த குடிமகனாக உருவாக்க வேண்டும்.

இத்தனை உயர்ந்த அம்சங்களும் ஆதாரக் கல்வியில் உள்ளன. இதை ஆதாரக் கல்வி என்று கூறுவதைவிட ஆதாயக் கல்வி என்றே கூறலாம். இதன் மூலம் கிடைக்கும் ஆதாயங்கள் பலவல்லவா ?

புதியது கண்டு அச்சம்

காந்தி இந்தத் திட்டத்தை நாட்டுக்கு அறிவித்த போது கல்வித்துறையில் ஈடுபட்டிருந்த அறிஞர்கள் பலர் பெருங்கூச்சல் போட்டார்கள். மோசம்! சுத்த மோசம்! பள்ளிக்கூடங்களை யெல்லாம் தொழிற்சாலைகளாய் மாற்றப்பார்க்கிறார், காந்தி. இப்படியும் ஒரு கல்வியா!" என்றார்கள்; ஆனால் காந்தி விடவில்லை. அவர்களுடைய ஆட்சேபங்களுக்கெல்லாம் தக்க பதில் கூறினார். ஜாகீர் ஹுசேன் போன்ற அறிஞர்களும் அவருடன் ஒத்துழைத்தார்கள். நடைமுறையில் திறம்பட நடத்தியும் காட்டினார்கள் அவர்கள். ஆயினும், இக்கல்வித் திட்டத்தின் சிறப்பை நாடு இன்னமும் நன்கு உணரவில்லை யென்றே கூற வேண்டும். இதில் வியப்பு இல்லை. பழைய கல்வி முறையிலேயே ஊறிப்போனம் நம் தலைவர்களும் கல்வியறிஞர்களும் புதிய மாறுதல் எதுவும் செய்ய அஞ்சுகிறார்கள். இது இயற்கை தான். ஆனால் அவர்கள் முக்கியமான ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். இன்று மேல் நாட்டிலுங்கூட இப்போதையக் கல்வி முறையில் பெரும் அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. ஹச். ஜி. வெல்ஸ், ஆல்டஸ் ஹக்ஸ்லி போன்ற பல சிந்தனையாளர்கள் இதை வன்மையாகக் கண்டித்திருக்கிறார்கள். பெர்னாட்ஷா எதையும் பச்சையாய்க் கூறக்கூடியவர். இக்காலக் கல்வி அவருக்குக் கொஞ்சம் பிடிக்காது. "நான் படித்தவன் என்றால், பதினான்காம் வயதிலேயே பள்ளிக்கூடத்தை விட்டு தப்பியோடி விட்டேன்" என்றார் அவர். பள்ளிக்கூடங்கள் மீது அவருக்கு அளவுகடந்தவெறுப்பு இருந்தது. அவற்றை "வெடி மருந்து வைத்துத் தகர்க்க வேண்டும்"

[44-ம் பக்கம் பார்க்க]

# கிராமப்புறங்களில் மாட்டுச் சாணவாயு

(திரு. வெ. பரஞ்சோதி, எம்.ஏ.)

தமிழ் நாட்டில் உள்ள கால் நடைகளின் எண்ணிக்கை 1 கோடியே 17 லட்சம் ஆகும். அவற்றில் பசு, எருமைகளின் எண்ணிக்கை முறையே 97 லட்சம், 20லட்சம் ஆகும். இவற்றின் சாணம் சிறந்த உரமாகும். நமது நாட்டில் மாடுகளின் சாணத்தின் பெரும் பகுதியை அடுப்பு எரிக்கவே உபயோகிக்கிறார்கள். அடுப்பு எரிப்பதற்கான விறகுகள் அதிக அளவில் நமக்குக் கிடைக்காததே இதற்குக் காரணமாகும். விறகு பற்றாக்குறையைப் போக்குவதற்கு எளிய முறை ஏதாவது உண்டா எனப் புது டெல்லியிலுள்ள விவசாய ஆராய்ச்சி நிலையம் ஆராய்ந்தது. மாட்டுச் சாணத்திலிருந்து வாயு தயாரித்து, அதை அடுப்பு எரிப்பதற்கு சிறப்பாக உபயோகிக்கலாம் என இந்நிலையம் ஆராய்ந்து முடிவு கண்டுள்ளது.

1954-ம் ஆண்டில் இந்த ஆராய்ச்சி முனைப்பாக மேற்கொள்ளப்பட்டது. காற்றோட்டம் இல்லாத இடத்தில் சாணத்தை நிரப்பி விட்டால் ஒருவிதமான வாயு எரி சக்தி ஏற்படுகிறது. இந்த வாயுவை 'மதேன்' (Methane) என்று ஆங்கிலத்தில் கூறுகிறார்கள். இந்த வாயுவைச் சேகரித்து வைத்து, குழாய் மூலம் செலுத்தி அடுப்பு எரிக்க உபயோகிக்கலாம்.

## சிறந்த சாதனம்

அடுப்பு எரிப்பதற்கான வாயுவை உண்டுபண்ண சாணம் ஒரு சிறந்த பொருளாகும். இவ்வாறு பயன்படுத்தப்படும் சாணத்தின் சத்து குறைவதில்லை. சாணத்திலிருந்து வாயு வெளியேறுவதன் காரணமாக சாணத்தின் உரச்சத்து அதிகரிக்கிறது. குவியலாக வைக்கப்பட்டுள்ள சாணத்திலோ அல்லது உபயோகமான சாணத்திலோ இருந்து கொசுக்கள், புழுக்கள் எதுவும் உற்பத்தியாகும் தொல்லை நீக்கப்படுகிறது.

ஏறக்குறைய நான்கு மாடுகளின் சாணத்தைகொண்டு வாயு தயாரிக்கும் ஒரு நிலையத்தை அமைக்கலாம். இதற்கு ரூபாய் 350 தான் செலவாகும். இதை நிர்வகிக்க அன்றாடச் செலவு எதுவும் தேவை இல்லை. 12 அடி ஆழமும், 6 அடி குறுக்களவும் உள்ள அறை ஒன்றை கட்டவேண்டும். இது சதுர வடிவமாகவோ அல்லது சிலிண்டர வடிவமாகவோ இருக்கலாம். இந்த அறையில் தண்ணீருடன் கலக்கப்பட்ட சாணத்தை சற்று திரவமாகப் போட வேண்டும். காற்றுப்புகாதவாறு இதன்மேல் ஒரு இரும்புத் தகட்டைக் கொண்டு மூடிவிட வேண்டும். அதாவது மேல்பாகத்தை கட்டியிருக்க வேண்டியதில்லை. இதனால் அறையில் புழுக்க நிலை ஏற்பட்டு சுவர் வழியாய்ச் சாணம் வழிந்து வரக்கூடும். அதனை உரமாக உபயோகிக்கலாம். குழாய் மூல

மாக சாண வாயுவைச் சேகரிக்கவேண்டும்.

இந்த வாயுவைக் கொண்டு சமையல் செய்யலாம். அல்லது விளக்கு எரிக்கலாம், 3 குதிரை சக்தி உள்ள எஞ்சினையும் இந்த வாயு உதவியுடன் ஓட்டலாம். ரசாயன சாலையில் இந்த வாயுவைச் சோதனையிட்டுப் பார்த்தால் நீல நிறமுள்ள ஜுவாலைகள் இதிலிருந்து வருவது தெரியும். இந்த ஜுவாலை சூடாகவும் புகையில்லாததாகவும் இருக்கிறது. இதனால் வெகு விரைவில் நேர்த்தியாகச் சமையல் செய்யலாம்.

தமிழ் நாட்டில் இத்திட்டத்திற்குச் சிறந்த வாய்ப்பு உண்டு. இந்திய அரசாங்கம் இதனை கிராம மக்கள் மத்தியில் பிரபலம் அடையச் செய்யமுடிவு செய்துள்ளது. வசதியுள்ள கிராம மக்கள் இத்திட்டத்தைப் பயன்படுத்தி, இதர விவசாயிகளும் இதனைப் பின்பற்றுமாறு வகை செய்ய வேண்டும். ஆரம்பக் காலத்தில் அரசினரும் நிதி வசதி மூலம் ஊக்கமளிக்கவேண்டும்.

கிராம மக்களின் உபயோகத்திற்கு ஏற்றவாறு மாட்டுச்சாண வாயு சாதனம் அமைக்கப்பட்டு, புது டெல்லி பகுதியிலுள்ள பன்னிரண்டு கிராமங்களிலும் உத்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த ஐந்து கிராமங்களிலும், எவ்வித தடங்கலும் இல்லாமல் மன நிறைவு அளிக்கும் வகையில் நடைபெற்று வருகின்றன.

இந்திய அரசாங்கம் தமிழ் நாட்டில் இத்தகைய எரி வாயு அமைப்புகளை ஏற்படுத்த ரூ. 50 லட்சம் ஒதுக்கியுள்ளது. தினந்தோறும் 20 குடும்பங்களுக்கு எரிவாயு விநியோகம் செய்யக்கூடிய அமைப்பு ஒன்று ரூ. 82,000 செலவில் 1964-ம் ஆண்டு மாதவரம் பால் பண்ணையில் அமைக்கப்பட்டது. இது ஒரு மாதிரித் திட்டமாகும். இம்முறை விரிவான வகையில் கிராமங்களில் பரவினால், விறகுக் கட்டைகளுக்காகக் காட்டு மரங்களையும் சாலை மரங்களையும் வெட்டுவது குறையும். இதனால் பிற நன்மைகள் பல்கிப் பெருகும்.

—கிராம நலம்.

[42-ம் பக்கத் தொடர்ச்சி]

என்றும் அவர் கூறியுள்ளார். இதைவிட அதிகமாய் யார் கண்டிக்க முடியும்? ஷா கூறியுள்ள யோசனையைப் பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகள் பின்பற்றலாம். நாம் பின்பற்ற முடியாது. ஏனெனில் இந்தியா ஏழை நாடு. இங்குள்ள பள்ளிகளையெல்லாம் வெடிமருந்து வைத்துத் தகர்த்து விட்டால், மறுபடியும்கட்ட நம்மிடம் பணம் இல்லை. ஆகவே கட்டிடங்களை நாம் வைத்துக் கொள்வோம். ஆனால், அங்கு கற்பிக்கப்படும் கல்வியை மாத்திரம் விரைவில் காந்திய முறையில் சிறந்த கல்வியாய் மாற்றுவோம்; அதன் மூலம் உயர்ந்த மனிதர்களை உருவாக்குவோம்.

—கிராம நலம்.

தூதர் பேச்சு

# ஜப்பானிய அற்புதம்

— செஸ்ட்டர் போல்ஸ் —

1945 ஆகஸ்ட் 14-ந் தேதி பசிபிக் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டபோது, ஜப்பான் குழப்பத்தில் ஆழ்ந்திருந்தது.

ஜப்பானிய நகரங்கள் அழிந்து விட்டன. போக்கு வரவு குலைந்து விட்டது. மக்கள் மனமுடைந்து நின்றனர். தொழில் திறன் போருக்கு முந்தியிருந்த நிலைகளோடு ஒப்பிடுகையில் கடுகாகக் குறுகி விட்டது.

இருபத்தோர் ஆண்டுகள் கழித்து, தோல்வியினால் ஏற்பட்ட குழப்பம், சோர்வு இவற்றினின்றும் ஜப்பான் விடுபட்டு, பொருளாதார உற்பத்தியில் அமெரிக்கா, ரஷ்யா, மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகளை அடுத்து நான்காவது இடத்தைப் பெறும் நிலைக்குவளர்ந் தோங்கியுள்ளது.

உள் நாட்டில் அறவே இரும்புக் கனி இல்லாதிருந்தும் கலப்பற்ற உலோகங்கள், பெட்ரோலியம் இவை மிகச் சொற்ப அளவுகளிலேயே இருந்த போதிலும், முன்பு ஒருபோதுமில்லாதபடி ஜப்பானியப் பொருளாதாரம் ஆண்டுக்குப் பத்துச் சதவீதம் என்ற விகிதத்தில் வளர்ந்து வந்துள்ளது

இன்று பிரான்ஸ், பிரிட்டன் அல்லது இத்தாலியை விட அதிகமாக ஜப்பான் எஃகு உற்பத்தி செய்கிறது; உண்மையில் அது அமெரிக்காவுக்கு எஃகு ஏற்றுமதி செய்து வருகிறது.

உலக மார்க்கெட்டுகள் அனைத்திலும் வாடிக்கைக்காரர்களைக் கவர்வதிலும், அந்நியச் செலாவணி சம்பாதிப்பதிலும் ஜப்பானிய ஏற்றுமதிகள் அபாரமாக வெற்றியடைந்துள்ளன.

உலகில் வேறெந்த நாட்டிலுமுள்ள குடியானவர்களைக் காட்டிலும் ஜப்பானியக் குடியானவர்கள் ஒரு ஏக்கரில் அதிக உணவு தானியம் விளைவிக்கின்றனர்.

இந்தப் பொருளாதார முன்னேற்றத்தின் பலன்களில் பெரும் பகுதியும் ஜப்பானிய மக்களுக்குக் கிடைத்துள்ளது. நாட்டுப்புறப் பகுதிகளில் கூட பெரும்பாலான ஜப்பானியர்கள் இன்று டெலிவிஷன், சலவை இயந்திரங்கள் உள்படத் தற்கால வாழ்க்கையின் மற்ற வசதிகளும் பெற்றுள்ளனர்.

மாபெரும் இந்தப் பொருளாதார வெற்றி எப்படிக் கிடைத்தது?

ஒரு வலுவான அடிப்படையில் ஜப்பான் தன் பொருளாதார வளர்ச்சியைத் தொடங்கியது; அதன் மக்களில் அநேகமாக நூற்றுக்கு நூறு பேர் படித்தவர்கள்; அதன் தொழிலாளர்கள் உலகிலேயே மிகவும் திறமையுள்ளவர்களுக்கு இணையானவர்கள்; ஜப்பானியத் தொழில் நிர்வாகிகள் காரியவாதிகள்; வளர்ச்சியே நோக்கமாகக் கொண்ட புதுமைகள் கண்டுபிடிப்பவர்கள்.

இந்த உறுதியான அடிப்படையோடு ஜப்பானியர்கள் பெரிய புதிய அம்சங்களையும் சேர்த்துக் கொண்டனர். இவற்றுள் முக்கியமானவற்றில் ஒன்று, 1947-ல் நடப்புக்குக் கொண்டுவரப்பட்ட நிலச்சீர்திருத்த ஏற்பாடு; இது ஒரு குடும்பம் $7\frac{1}{2}$ ஏக்கர் நிலம் தான் வைத்திருக்கலாமென நிலவுடைமைக்கு வரம்பு கட்டியது.

பலன்: ஜப்பானிய நாட்டுப்புறக் குடும்பங்களில் 94 சதவீதம் குடும்பங்களுக்கு நில உடைமை உண்டாயிற்று; நிலம் அவர்களுக்குச் சொந்தமானது. உரிய ஊக்கத்தையளித்தது. இது இன்றைய ஈடு இணையற்ற அளவுக்கு விவசாயம் வளர்ந்தோங்கச் செய்தது.

அதே சமயத்தில் விநியோகச் செலவுகளைக் குறைக்கவும், மலிவான விலையில் ரசாயன உரங்களும், பூச்சி கொல்லிகளும், விவசாயக் கருவிகளும் வழங்கவும் மிகுந்த திறமையுள்ள கூட்டுறவு விற்பனை நிலையங்களோடு கூடிய நாட்டுப்புறக் கடன்வசதி முறைகள் ஏற்பட்டன.

தொழில் துறையில் பெரிய சிறிய நிறுவனங்கள் இரண்டுமே விரைவாக வளர்ந்தோங்குவதற்குத் தாராளமான வரிச சலுகைகள் ஊக்கம் அளித்தன. தனியார் துறையால் முடியாதபோது அல்லது அது செயல் புரிய விரும்பாத போது, உற்பத்தி வசதிகளை நிறுவி நடத்த அரசாங்கம் தயங்கவில்லை.

அந்நிய முதலீடு விரும்பி வரவேற்கப்பட்டது. எனவே அது ஏராளமாக விரைந்து வந்து குவிந்தது. அதே சமயத்தில் ஏற்றுமதி மார்க்கெட்டுகள் உன்னிப்பாக ஆராயப்பட்டன. போட்டியிடக்கூடிய நிலைமைகளுக்கு உற்பத்திப் பொருட்கள் திருத்தியமைக்கப் பட்டன. வெளி நாடுகளில் அவற்றை விற்பதற்குத் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

குடும்பக் கட்டுப்பாடு எவ்வளவு முக்கியம் என்பது உணரப்பட்டது. இன்றுள்ளது போன்று ஆண்டுக்கு ஒரு சதவீதத்துக்கும் குறைந்த அளவுக்குப் பிறப்பு விகிதம் மட்டுப்படுத்தப் பட்டது.

ஜப்பான் செய்ததை மற்ற ஆசிய நாடுகளும் செய்ய முடியும்; வழி தெளிவானது என நான் கருதுகிறேன்: அது வருமாறு.

(1) கல்வி, விவசாயம், மக்கள் தொகைக் கட்டுப்பாடு ஆகியவற்றிற்கு முதலிடம் அளித்தல்.

[48-ம் பக்கம் பார்க்க]

தமிழ் நாட்டு விவசாயியின் சாதனை :—

# வேர்க்கடலை மகசூலில் புதிய வெற்றி

உணவுக்காகப் பிற நாடுகளை எதிர்பார்க்கும் நிலையிலிருந்து நம்மை மாற்றி, சுய தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்காக நம் நாடு அயராது உழைத்திருக்கிறது. நவீன முறைகளில் விவசாயம் செய்து, உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக, வளர்ச்சித் திட்டங்களும் செயலில் கொண்டு வரப்பட்டுள்ளன. நம் விவசாயிகளும் பழைய முறைகளைக் கைவிட்டுவிட்டு, புதிய முறைகளைக் கையாளத் துவங்கிவிட்டனர்; ஒரு போகம் விளைந்த நிலங்களெல்லாம் மாற்றப்பட்டு இருபோக விளைச்சல் நிலங்களாக ஆக்கப்பட்டுள்ளன. இம் முன்னணி விவசாயிகளுக்கு நாடு என்றும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளது. இவர்களுக்கு ஊக்கம் அளிப்பதற்காக, பரிசுத் திட்டங்களையும் அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது.

தமிழ் நாட்டின் தென் ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த, செஞ்சி தாலுகாவில் மேலச்சேரி என்ற கிராமத்திலுள்ள திரு. வாசுதேவ செட்டியார் என்பவரைப் பரிசு பெறுவதற்காகவே பிறந்தவர் என்று கூறலாம். வேர்க்கடலை மகசூலில் பல புதிய திருப்பங்களை ஏற்படுத்தியவர், திரு. வாசுதேவ செட்டியார். 1957-58 வரை தாலுகா அளவில் பரிசுகளையும் 1960-61 மாவட்ட அளவில் பரிசுகளையும், பெற்று வந்த இவர், ஒரு ஹெக்டார் நிலத்தில் 3,579 கிலோ வேர்க்கடலையை விளைவித்து, 1960—61-ம் ஆண்டில் மாநிலப் பரிசையும் பெற்றார்.

வேர்க்கடலை மகசூலில் பெருத்த விளைச்சலைக் கண்ட இவர்; தமிழ்நாடு விவசாயத் துறை சிபாரிசு செய்த எல்லா முறைகளையும் கையாண்டார். அவருடைய விவசாய முறை பின் வருமாறு :—

ஒரு ஹெக்டேருக்கு 62 வண்டிகள் ஏரி வண்டலையும், 12 வண்டிகள் உலர்ந்த இலைகளையும் இவர் போட்டார். அடுத்து இவர், தொழு உரம், சூளைச்சாம்பல் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் 12·6 டன் இட்டார்.

மேலும் விவசாயத் துறையின் சிபாரிசின் பேரில் T. M. V. 3 என்ற உயர்ந்த ரக விதைகளைப் பயன்படுத்தினார். சாதாரணமாக விவசாயிகள் ஒரு ஹெக்டேருக்கு 84 முதல் 90 கிலோ விதைகள் நடுவதுண்டு; ஆனால் இவர் விவசாயத்துறையின் ஆலோசனைப் படி, ஒரு ஹெக்டேருக்கு 66.25 கிலோவையே பயன்படுத்திக் கொண்டார்.

விதைப்பதற்கு முன் ஒரு ஹெக்டேருக்கு 125·5 கிலோ

வீதம் சூப்பர் பாஸ்பேட் நிலத்தில் போடப்பட்டது.

ஜூலை மாத இரண்டாம் வாரத் துவக்கத்திலேயே விதைகள் நடும் வேலையைத் துவக்கி விட்டார். சீக்கிரமாக விதைகளை நட்டுவிட்டால், விளைச்சல் அதிகமாகும்.

விதைகளை நடுவதற்கு முன்பேயே, நிலத்தை நன்கு பயன்படுத்தி விட்டதால், களைகள் பயிரை நாசம் செய்வதில்லை. இருந்தபோதிலும், 15 முதல் 20 நாட்கள் இடைவெளியில் மூன்று முறை வயலில் களையெடுத்தார். பயிர் பிரமாதமாக வளரத் துவங்கி, அமோகமான விளைச்சலைத் தந்தது.

எந்த விவசாயியும் வேர்க்கடலையில் எளிதாக அமோக விளைச்சலைக் காண முடியும் என்பது திரு. செட்டியாரின் அபிப்பிராயமாகும். ஆனால் அந்த விவசாயி போதுமான அளவில் தொழு உரம், பசுந்தாள் உரம், மற்றும் இதர உரங்களை வயலில் இட்டு, விதைப்பதற்கு முன் வயலை நன்கு பயன்படுத்தி, காலத்தில் விதை விதைத்து ஒழுங்காகக் களையெடுக்க வேண்டும். பிறகு விளைச்சலுக்கு கேட்கவா வேண்டும்!

இந்த நவீன வழக்கங்களையெல்லாம் கைக்கொண்டால், நிச்சயம் வேர்க்கடலையில் நல்ல விளைச்சல் உண்டு என்கிறார் திரு செட்டியார், ஆணித்தரமாக.

இன்று நாட்டிற்குத் தேவையானவர்கள், திரு. செட்டியாரைப் போன்ற முன்னணி விவசாயிகளே. இவர்களால்தான் நாடு உணவில் சுய தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள முடியும்.

---

[46-ம் பக்கத் தொடர்ச்சி]

(2) உழும் நிலம் அவர்களுக்குச் சொந்தமாகும் என்ற உத்தரவாதத்துடன்கூடிய, குடியானவர்களில் மிக அதிக பட்சம் பேர் முழு ஆற்றலுடன் பாடுபட வகை செய்யும் நிலச் சீர்திருத்தம்.

(3) நிலச் சூதுபோத்தைக் கடுமையாகக் கட்டுப்படுத்துவதும், அதிக வேலைகள் அளிப்பதோடு உற்பத்தியையும் பெருக்கும் புதிய முதலீடுகளுக்குத் தாராளமான வெகுமானம் அளிப்பதுமான ஒரு வரி விதிப்பு முறை.

(4) வளர்ச்சிக்கு வழிகாட்டி ஊக்கமளிப்பதும், மேலும் பொருளாதார நீதியும், வாய்ப்பு உரிமையும் இடையறாமல் எல்லா மக்களுக்கும் கிடைக்க உறுதி செய்வதுமான ஒரு அரசாங்கம்.

(5) ஆக்கமான தனியார் முயற்சிக்கு இடையூறான அதிகார வர்க்கத் தடைகளை ஒழித்தல்.

செல்லரித்துப்போன பொருளாதாரக் கோட்பாடுகளைத் தூக்கி எறியவும், மக்களின் வளமைக்கும் நல்வாழ்வுக்கும் காரியத்தில் கண்ணாகப் பாடுபடவும் உறுதிபூண்ட ஆசிய நாடு ஒன்று முன்னுக்கு வந்த ஈடு இணையில்லாத வரலாறு இது.

---

Edited Printed and Published by P. VEERARAGHAVAN.
at Venkatesan Press, 2-65, Broadway, Madras-1.